REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 செப்டெம்பர் 28 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 230 | Thursday 28, September, 2023 | 12 பக்கங்கள் | 50/-


## பேர்லின் குளோபல்" மாநாட்டுக்காக ஜனாதிபதி ஜேர்மன் பயணமானார்

தற்கால உலக அரசியல் மற்றும் பொருளாதார சவால்களுக்கு தீர்வுகாண்பதற்கான உயர்மட்ட முன்னெடுப்பான "பேர்லின் குளோபல்" மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (27) அதிகாலை புறப்பட்டுச் சென்றார். இம்மாநாடு, பல நாட்டுத் தலைவர்களின் பங்கேற்புடன் செப்டெம்பர் 28, 29 ஆம் திகதிகளில் ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெறவுள்ளது. மாநாட்டின் முதல் நாளன்று

04

## முஹம்மது நபிகளாரின் போதனை நல்வாழ்விற்கான நற்சிந்தனைகள்

### மீலாத் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



இஸ்லாம் மார்க்கத்தின் இறைத் தூதரான முஹம்மது நபி அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கும், உலக வாழ் முஸ்லிம்களுக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதாக ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.மீலாத் வாழ்த்துச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது:

மனிதகுலத்திற்கு அன்பு மற்றும் அமைதியின் செய்தியைப் பரப்பிய இஸ்லாத்தின்

04






## 03 நபிகளாரின் வாழ்க்கை தத்துவத்தை சமூக நலனுக்காக பயன்படுத்துவோம்



## 03 சமூகங்களின் சகவாழ்வுச் செயற்பாடுகளை தத்துவரீதியாக உணர்த்திய உத்தமர் நபிகளார்

## இலங்கையின் பொருளாதாரத்தில் தற்போது சாதக நிலை

# நெருக்கடியான காலத்தில் IMF நிச்சயம் உதவும்

### இலங்கை வந்துள்ள IMF தூதுக்குழுவின் தலைவர் Peter Breuer தெரிவிப்பு

**கடினமான எனினும் மிகவும் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதென்றும் தெரிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

இலங்கையின் பொருளாதாரத்தில் சாதகமான சில நிலைமைகள் காணப்படுவதுடன் மேலும் சில துறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமென சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி தலைவர் பீற்றர் ப்ரூவர் (Peter Breuer) தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கியுள்ள கடன் சலுகைகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு

04



## வருட இறுதிக்குள் 15 இலட்சம் சுற்றுலா பயணிகளை வரவழைக்க எதிர்பார்ப்பு

### சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரங்களை தூங்கா நகரங்களாக மாற்றியமைக்க வேண்டும்

வருட இறுதிக்குள் 15 இலட்சம் சுற்றுலாப் பிரயாணிகளை நாட்டுக்கு வரவழைப்பதற்கு அவசியமான ஊக்குவிப்புத் திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாக சுற்றுலாத்துறை பதில் அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளதெனவும், அவர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக டெக்ஸி சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் பதில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டிருந்த போதே பதில் சுற்றுலாத்துறை பதில் அமைச்சர் டயனா கமகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரங்களை தூங்கா நகரங்களாக மாற்றியமைக்க வேண்டும் என்றும்



அமைச்சர் சுட்டிக்காட்டினார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

நேற்று (27) சர்வதேச சுற்றுலாத் தினமாகும். சுற்றுலாத்துறை அமைச்சு அதனை சுற்றுலாத் தினத்தை எளிய முறையில் கொண்டாடியதாகவும், இந்நாட்டின் சிறந்த சமையல் கலை நிபுணரான பபிலிஸ் சில்வாவுக்கு "ஜய ஸ்ரீ லங்கா" என்ற பெயரிலான சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## அம்பாறையில் 4652 ஏக்கர் விவசாய காணிகள் விடுவிப்பு

### நில மீட்பு முயற்சியில் வெற்றியென முஷர்ரப் எம்பி பெருமிதம்

*(எஸ்.எம்.அறூஸ்)*



நிலம் எமது உரிமை, முஸ்லிம்களின் அரசியலின் இலக்காக அம்பாறை மாவட்ட அரசியலின் முக்கிய நோக்காக எது இருக்க வேண்டுமென, எவரும் என்னிடம் வினவினால், நில மீட்பு என்றே பதிலளிப்பேன். இவ்வாறு முஷாரப் எம்.பி. தெரிவித்துள்ளார்.

காணிகள் விடுவிப்பது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். முஷர்ரப் எம்பியின் அறிக்கையில்

04

## GCE A/L பரீட்சை தொடர்பில் திங்களன்று இறுதி தீர்மானம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதிகள் தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படுமென அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சைக்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ள திகதிகள் திருத்தப்பட வேண்டுமென, கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த முன்னதாக குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடற்றொழிலாளர் பிரச்சினை தீர்வுக்கு சக தமிழ் எம்பிக்கள் ஒத்துழைப்பர்

### அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்தும் விடயத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா சென்று தமிழக தலைவர்களுடன் கலந்துரையாடி, உண்மையான நிலைமையை புரியவைக்க வேண்டும். இதற்கு சக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்களென, தாம் நம்புவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்..

04

## புதிய கொடிய வைரஸ் WHO எச்சரிக்கை

### 05 கோடி மக்கள் இறக்கலாம்...?

கொரோனா வைரஸை விட அடுத்ததாக வரவுள்ள கொடிய வைரஸால் 05 கோடி பேர் இறக்கலாமென உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. வரவிருக்கும் கொடிய வைரஸுக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக எந்தப் பெயரும்

04

### சினோபெக் நிறுவனத்துக்கு

## 50 எரிபொருள் நிலையங்களை மேலதிகமாக வழங்க அனுமதி

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



சீனாவின் சினோபெக் நிறுவனத்துக்கு நாட்டில் மேலும் ஐம்பது எரிபொருள் நிலையங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எரிசக்தி மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

04


## அதிபர்களுக்கான வெற்றிடங்களை பூர்த்தி செய்ய நீதிமன்றம் உத்தரவு

இலங்கை அதிபர் சேவையின் தரம் IIIக்கான 4,718 வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு கல்வி அமைச்சு எடுத்த தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த ஆட்சேர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான இடைக்கால தடை உத்தரவு வாபஸ் பெறப்பட்டதையடுத்து, இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. விடயத்துடன் தொடர்புடைய மேலும் சில மனுக்களை வாபஸ் பெறுவதற்கும் மனுதாரர்கள் தீர்மானித்துள்ளனர். ஆசிரியர் ஆட்சேர்ப்பு தொடர்பான சுற்றுநிருபத்தை இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றத்தினால், இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவும் நேற்று(27) நீக்கப்பட்டது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில், இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## போதைப்பொருள் கடத்திய ஐவருக்கு மரண தண்டனை

### கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



மீன்பிடிப் படகில் ஹெரோயின் போதைப் பொருளை நாட்டுக்குள் கொண்டு வந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 05 குற்றவாளிகளுக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

நீண்ட காலமாக தொடர்ந்த வழக்கையடுத்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே மேற்படி தீர்ப்பை நேற்று வழங்கினார். கடந்த 2019 ஆம்

04

### 2003 இல் இடம்பெற்ற படுகொலை

## 20 வருடங்களின் பின்னர் எட்டு பேருக்கு மரண தண்டனை தீர்ப்பு

### களுத்துறை மேல் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

களுத்துறையில் 2003 இல், இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றில் குற்றவாளிகளாக காணப்பட்ட 08 பேருக்கு, களுத்துறை மேல் நீதிமன்றம் நேற்று (27) மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

களுத்துறை ஹீனட்டியங்கல பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதான மொஹமட் செய்யித்

04

## தனிநபர் வரியை செலுத்தாத பலர்

### 90 சதவீதமானோர் ஏமாற்றியுள்ளனர்

தனிநபர் வரி செலுத்துவோரில் 90 சதவீதமானோர் கடந்த வருடம் வரி செலுத்தாதிருந்தமை தெரியவந்துள்ளது. ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் நிறுவனங்களில் 85 வீதமானோர் இவ்வரியை செலுத்தவில்லை. இவற்றில் 494 நிறுவனங்கள் மட்டுமே வரியை செலுத்தியுள்ளன. இது குறித்து தேசிய

04

## ஈராக் திருமண மண்டபத்தில் திடீர் தீ: 113 பேர் பலி,150 பேர் காயம்



ஈராக்கில் திருமண மண்டபமொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், சுமார் 113 பேர் உயிரிழந்து, 150 பேர் வரை காயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் வடக்கிலுள்ள நினவா மாநிலத்தின் அல்ஹம்டனியா பகுதியிலேயே, இத்தீ விபத்து ஏற்பட்டுள்ளது. திருமண மண்டபத்தில் தீயணைப்பு படை வீரர்கள் தீயை அணைக்க முயலும் படங்கள்

04

## ரயில் பயணச்சீட்டு சோதனையை அதிகரிக்க அவசர நடவடிக்கை

### மருதானை, கோட்டை நிலையங்களில் தீவிரம்



பயணச்சீட்டின்றி ரயிலில் பயணிப்பவர்களை கண்டறியும் வகையில் சோதனைகளை அதிகரிக்க, நடவடிக்கை எடுத்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரதானமாக மருதானை மற்றும் கொழும்பு கோட்டை ரயில் நிலையங்களில் இப்பரிசோதனைகள் தீவிரப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

04

### 12 கோடியே 30 இலட்சம் பெறுமதியென மதிப்பீடு

## விமான நிலையத்தில் சிக்கிய ஆறுகிலோ தங்க பிஸ்கட்

### நாலு பெண்கள், ஆண் ஒருவர் அதிரடிக் கைது

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஆறு கிலோ தங்கம் மற்றும் தங்க பிஸ்கட்களுடன் 04 பெண்கள் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள்

04

## நகர்வலம்

# தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு இன்று இரத்ததான முகாம்

கண்டி – மடவளையில் தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு மடவளை பஸார் வை.எம்.எம்.ஏ. (YMMA) அமைப்பின் ஏற்பாட்டில் 17வது தடவையாகவும் இன்று 28 ஆம் திகதி வியாழக்கிழமை மாபெரும் இரத்ததான முகாமை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மடவளை பஸார் வை.எம்.எம்.ஏ அமைப்பின் பொதுச் செயலாளர் ஏ.எம்.ஹசன் பிராஸ் தெரிவித்தார்

அமைப்பின் தலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். ரிஷாட் தலைமையில் காலை 8.00 தொடக்கம் மாலை 3.00 மணி வரை மடவளையில் அமைந்திருக்கும் சன்சைன் (sunshine) திருமண மண்டபத்தில் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

இரத்ததான முகாமில் பிரதேச வாழ் அனைத்து சமூகத்தினரும் கலந்துகொண்டு இரத்ததானம் செய்ய முன்வருமாறு ஏற்பாட்டுக்குழு வேண்டுகோள் விடுக்கின்றது. அன்றைய தினம் இரத்ததானம் வழங்குபவர்களுக்கு சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கிவைக்கப்படவுள்ளன.

## முத்துராஜவெல சுற்றுச் சூழல் அச்சுறுத்தல் வலயத்தில்

# காணி மறுசீரமைப்பு நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்தவும்!



முத்துராஜவெல சுற்றுச் சூழல் அச்சுறுத்தல் தொகுதியில் ஜாஎல வலயத்தில் காணி மறுசீரமைப்பை மேற்கொள்ள இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் வழங்கிய அனுமதியை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அங்கு பேசிய நிமல் லான்சா,

பிரதேச அபிவிருத்திக் குழுவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவும் எந்த சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்காத போது, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் முத்துராஜவெல சுற்றுச் சூழல் அச்சுறுத்தல் தொகுதியில் காணிகளை மறுசீரமைக்க எதன் அடிப்படையில் அனுமதி வழங்கியது? மூன்று மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் அதி உணர்திறன் சூழல் தொகுதியில் காணி மறுசீரமைப்பை நிறுத்துமாறு ஆலோசனை வழங்கியிருந்தது. ஒரு சிலரின் தன்னிச்சையான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது.

கத்தோலிக்க திருச்சபை, மதத் தலைவர்கள், சுற்றுச்சூழல் அமைப்புகள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரின் எதிர்ப்பையும் மீறி இதைச் செய்தமைக்கு எங்களது கடும் அதிருப்தியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார். குறைந்த பட்சம் பொறுப்பான அமைச்சருக்கு அறிவிக்காமல் அந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தவறான செயலாகும். இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விடயத்துக்கான பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் பாராளுமன்ற உபகுழுக்களுக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை, காணி மறுசீரமைப்பை தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் அவர் தெரிவித்தார். சுற்றுச்சூழலையும் பல்லுயிர் பெருக்கத்தையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் போது, சுற்றுச்சூழலை அழிக்க முற்படுவதை பிறருக்கு அனுமதிக்க முடியாதென்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

"முத்துராஜவெலவின் மிகவும் சுற்றுச் சூழல் அச்சுறுத்தல் வாய்ந்த சுற்றாடல் வலயத்தைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும், மேலும் ஒரு குறிப்பிட்ட சிலர் சுற்றுச்சூழலை அழிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்." என நிமல் லான்சா மேலும் தெரிவித்தார்.

# விருந்தோம்பலில் ஒருவர் உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீப்புக்குளம் பகுதியில் இடம்பெற்ற விருந்தோம்பலின் போது ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சீப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.எம். கருணாரத்ன சிசிர குமார செனவிரத்ன என்ற (59) வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த (23) இரவு சீப்புக்குளம் பகுதியில் விவசாயப் பணிகள் நிறைவடைந்த நிலையில் கிராமிய நெல் விழாவையடுத்து அருகிலுள்ள வீடொன்றில் விருந்துபசாரம் இடம்பெற்றுள்ளது. குறித்த விருந்தின் போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியே இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

# வெலிகமயில் 18 ஆவது மீலாதுந் நபி விழா

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

18ஆவது ஆண்டாக அத்தரீக்கத்துல் ஹக்கிய்யதுல் காதிரிய்யா ஏற்பாடு செய்துள்ள மீலாதுந் நபி பெருவிழா இன்று (28) வெலிகாமம், இலக்கம் 52, புஹாரி மஸ்ஜித் மாவத்தை, 'பைத்துல் பரகாஹ்' இல்லத்தில் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ் ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா (வாப்பா நாயகம்) தலைமையில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு ஜமாஅத்துல் (ஜம்இய்யதுல்) உலமாவின் பொதுச்செயலாளர் அஃப்ழலுல் உலமா, டாக்டர் அன்வர் பாதுஷா (உலவி) P.hD. ஹழ்ரத், சென்னை சுன்னத் வல் ஜமாஅத் பேரவைத் தலைவர் மௌலவி டாக்டர் ஷெய்கு அப்துல்லாஹ் (ஜமாலி)P.hD ஹஸ்ரத், மன்பவுஸ் ஸலாஹ் அறபுக் கல்லூரி பேராசிரியர் மௌலவி முஸ்தஃபா (மஸ்லாஹி) மற்றும் பிரபல கஸீதாப் பாடகர் அஹ்மத் ஸாலிஹ் பஹீமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நாளை 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2:00 மணி முதல் இரவு 9:00 மணிவரை பிரபல உலமாக்களின் உரைகளும் நூல் அறிமுகம் மற்றும் நபிபுகழ் பாடல், கஸீதாக்களின் ஓடியோ வெளியீடும் இடம்பெறும்.

# கற்பிட்டி விமானப்படை முகாமில் வெடிப்புச் சம்பவம்

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

## இளம் விமானப்படை வீரர் உயிரிழப்பு; ஒருவர் காயம்

புத்தளம் கற்பிட்டி கண்டல்குளி பகுதியில் உள்ள விமானப்படை முகாமில் வெடிகுண்டு செயலிழக்கும் இடத்தில் நேற்று முன்தினம் (26) மாலை 5 மணியளவில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இளம் விமானப்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

வெடிகுண்டு செயலிழக்கும் பிரிவில் பணியாற்றிய புத்தளம் பல்லம பகுதியைச் சேர்ந்த ரணசிங்க எனும் 28 வயதுடைய இளைஞரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.



மேலும் மற்றொரு விமானப்படை வீரரும் இந்த வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்துள்ளதாகவும், அவரது நிலை கவலைக்கிடமாக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற போது உயிரிழந்த விமானப் படை வீரர், துப்பாக்கிச்சூடு பயிற்சியை நிறைவு செய்த பின்னர் மற்றுமொரு வீரருடன் வெடிகுண்டு செயலிழக்கும் இடத்தை நோக்கிப் பயணித்ததாகவும் பொலிஸார் கூறினர்.

இதன்போது, வெடிகுண்டு அல்லது முக்கிய பரிசோதனை ஒன்றை நடத்திய போது மேற்படி வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பொலிஸார் கூறுகின்றனர்.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை இலக்கியக்களம் நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நாளை 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இலக்கிய களம் நிகழ்வு தமிழ்ச் சங்க இலக்கியக்குழுச் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி ஜெ.தற்பரன் தலைமையில் "இசை அரங்கு" நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இசை முதுகலைமாணி திருமதி சந்திரிகா ரவிகுமாரின் மாணவி செல்வி ஷஷி ஸ்னோவிகா சிவகுமார் இசை அளிக்கையினை நிகழ்த்துவார். குயிலுவக் கலைஞர்களாக வயலின் திருமதி மதுரா பாலச்சந்திரன், மிருதங்கம் திரு.வை. வேனிலான் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# ஐந்தாம் தரம் புலமை பரீட்சை கருத்தரங்கு

தமிழர் நற்பணி மன்றம் இவ்வாண்டு ஐந்தாம் தரம் புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக தமிழர் நற்பணி மன்றம் ஒழுங்கு செய்துள்ள இலவச கல்வி கருத்தரங்கு எதிர்வரும் 01ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை தெமட்டகொடை விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தில் நடாத்தவுள்ளது. இச்செயலமர்வில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் கலந்து கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பெருந்தோட்ட மருத்துவ நிலையங்களில் பணியாற்ற வைத்திய அதிகாரிகள்

## முதற்கட்டமாக 10 நிலையங்களில் நியமிக்க தீர்மானம்

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

பெருந்தோட்ட பகுதிகளில் முதற்கட்டமாக 10 மருத்துவ நிலையங்களுக்கு சுகாதார அமைச்சின் ஊடாக வைத்தியர்களை நியமிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுக்கு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமிக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று சுகாதார அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. லால்பேரேரா, சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் சரத் அமுனுகம ஆகியோர் கலந்து கொண்டதுடன் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக ஸ்ரீ சந்திர குப்தா சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அஸேல குணவர்தன, பெருந்தோட்டத் துறை மருத்துவ பிரிவு பணிப்பாளர் வைத்தியர் சுபாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இதன்போது பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் மருத்துவ நிலையங்களை தனி வைத்திய அலகாக மாற்றுதல் தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதனையடுத்து இதற்கான மாற்று தீர்வுகளை பெறுவதற்கான வியூகங்களும் ஆராயப்பட்டன.

அந்தவகையில் அதன் முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 10 மருத்துவ நிலையங்களுக்கு சுகாதார அமைச்சின் ஊடாக வைத்தியர்களை வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் அதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தை பெறவும் முடிவு செய்யப்பட்டது. அங்கு வரும் வைத்திய அதிகாரிகளுக்கு தோட்ட நிர்வாகத்தின் மூலமாக அனைத்து வசதிகளையும் பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்பட வேண்டுமெனவும் இவை மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மேற்பார்வையில் இடம்பெற வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. நியமிக்கப்படும் வைத்தியர்கள் தோட்டத்துறையில் மாத்திரம் பணியாற்ற முடியும் என்பதுடன் நேரடியாக சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுடன் செயல்படவும் உள்ளனர்.

மேலும் பெருந்தோட்ட பகுதிகளுக்கான தாதியர் சேவை (midwife) 3000 நபர்களுக்கு ஒருவராக இருந்து 1500 பேருக்கு ஒருவராக குறைவடையவுள்ளது. இதன் மூலமாக சுகாதாரத் துறையின் முழு வீச்சும் மக்களுக்கு சென்றடைவதுடன் போசாக்கு குறைபாடு, மருந்துகளை பெறுவதில் காணப்படும் சிக்கல்களும் தீர்க்கப்படும்.

மேலும் சிறுவர்களின் போசாக்கு மட்டத்தை உயர்த்துவதற்கு மாவட்ட சுகாதாரத் திணைக்களம், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் என்பன இணைந்து திரிபோச சத்துணவு திட்டத்தை மேற்கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி பெருந்தோட்ட பகுதிகளை அண்டியுள்ள மாவட்ட வைத்தியசாலைகளில் மக்களுக்கு இலகுவாக சேவைகளைப் பெற்றுக் கொள்ள தமிழ் மூல அதிகாரிகளை நியமிப்பதற்கும், புதிதாக நியமிக்கப்படும் அதிகாரிகளுக்கு தமிழ்மொழி மூல பயிற்சிகளை வழங்கவும் இணக்கம் எட்டப்பட்டது.

## மலைச்சாரல்

# நுவரெலியாவில் மனத்தூய்மைக்கான தியான பயிற்சி



நுவரெலியாவில் மனத்தூய்மைக்கான தியான பயிற்சி நாளை 29 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

நுவரெலியா லயன்ஸ் கிளப், நுவரெலியா ரொட்ரிக் கிளப், நுவரெலியா காயத்ரிபீடம், நுவரெலியா இந்து கலாசார பேரவை, நுவரெலியா வர்த்தக சங்கம், கொஸ்கம தம்மா சோபா தியான மையம் ஆகியன இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

இந்நிகழ்வை நடாத்துவதற்காக சுப்பிரமணியம், திருமதி. ஜானகி மற்றும் சிவக்குமார் ஆகியோர் இந்தியாவிலிருந்து இன்று இலங்கை வரவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியானது நாளை (29.9.2023) காலை 10:30 1:30 வரை நுவரெலியா காயத்ரி பீடத்திலும், மாலை 3 மணி முதல் 4 மணி வரை இளைஞர்களுக்கான நிகழ்ச்சி, ஹவாஎலிய ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலிலும் நடைபெறவுள்ளது.

30 செப்டெம்பர், மாலை 4 – 6 மணி வரை லபுகல, பம்பரகல தோட்டக் கோவிலும், ஒக்டோபர் முதலாம் திகதி காலை 9 மணி – 10 மணி வரை நுவரெலியா காயத்ரி பீடத்திலும் நடைபெறவுள்ளது.

அதுமட்டுமின்றி தமிழ், ஆங்கில மொழிகளில் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை பத்து நாட்கள் தியான பயிற்சி வகுப்புகளும் நடைபெறவுள்ளன.

# ஆத்மீகம், லௌகீகத்தில் சமகால சாதனை நிலைநாட்டியவர் முகமது நபி

## மீலாத் தின வாழ்த்து செய்தியில் ஆளுநர் முஸம்மில்



ஆத்மீகம், லௌகீகத்தில் சமகால சாதனை நிலைநாட்டியவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என ஊவா மாகாண ஆளுநர் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

மிலாத் தின வாழ்த்து செய்தியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அகிலத்தாருக்கு அருட்கொடையாக வந்துதித்த இறுதி இறை தூதர் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த தினம் இன்றாகும்.

அந்தவகையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த ரபீஉல் அவ்வல் மாதம் அலாதியான சிறப்பைப் பெறுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மீலாத் தினம் எனப்படும் நபியவர்களின் பிறந்த தினமானது உலகளாவிய ரீதியில் மகிழ்ச்சியையும் சந்தோசத்தையும் வெளிப்படுத்தக்கூடிய உன்னதமான ஒரு நிகழ்வுக்குரிய தினமாகும்.

சிறுவர் உரிமை, பெண்கள் உரிமை, மனித நேயம், இனங்களுக்கிடையிலான சமத்துவம், நல்லிணக்கம் என்பவற்றுக்காக அன்னார் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். எப்போதும் எல்லா நிலைமைகளிலும் நிதானமாக நடந்துகொண்டதோடு ஏழை எளியோரை, அநாதைகளை அரவணைத்து வாழ்ந்தார்கள். பல்லின சமூகங்களையும் உள்ளடக்கிய 'மதீனா சாசனம்' எனும் நீதமான யாப்பை அறிமுகம் செய்தார்கள். சமயம், உலகியல் ஆகிய இரண்டிலும் ஒருசேர மகத்தான வெற்றியைப் பெற்றார்கள். எனவே தான் மனித வரலாற்றில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய மாமனிதராக அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உப அலுவலகம் ஹற்றனில் திறந்துவைப்பு

**(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நுவரெலியா மாவட்ட உப அலுவலகம் ஹற்றன் மல்லியப்பு சந்தியில் ஆணைக்குழு ஆணையாளர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவாவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஹற்றன், கண்டி பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் மக்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறையிடுவதற்கு கண்டி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கே செல்ல வேண்டிய நிலைமை காணப்பட்டது.



இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்தனர். எனினும் அதனை தவிர்க்கும் முகமாக தற்சமயம் ஹற்றனில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளை அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. ஹற்றன் நகரில் திறக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் உப அலுவலகத்தில் தோட்டப்பகுதியில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறையிட முடியும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்காலத்தில் வாரத்துக்கு ஒரு முறை முறைப்பாடுகளை சமர்ப்பிக்கமுடியுமென கண்டி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் விரஞ்சன் டயஸ் சுமனசேகர தெரிவித்தார். இந்நிகழ்வில் ஹற்றன் பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகம, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், பல சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

### நிலைபேறான போக்குவரத்து தொடர்பில்

# அனைத்து நாடுகளுக்கிடையிலான பலமான தொடர்புகள் அவசியம்

## பீஜிங்கில் அமைச்சர் பந்துல குணவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



'பூகோள நிலைபேறான போக்குவரத்து' தொடர்பில் அனைத்து நாடுகளுக்கிடையிலும் பலமான தொடர்புகளுடனான இணக்கப்பாடுகளை கட்டியெழுப்புவது அவசியமென போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சீனாவின் பீஜிங் நகரில் நடைபெறும் 2023 ஆம் ஆண்டுக்கான பூகோள நிலைபேறான போக்குவரத்து மன்றத்தின் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்வதற்காக நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் காபன் மட்டுப்படுத்தல் உள்ளிட்ட புதிய வாகனங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றில் இலங்கை சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது.

போக்குவரத்துத் துறையில் இடம்பெறும் ஊழல் மோசடி காரணமாக அரச துறை மட்டுமன்றி, தனியார் துறை பஸ் உரிமையாளர்களும் பெருமளவு நட்டம் ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பஸ் மற்றும் ரயில்வே முகாமைத்துவத்திற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வை அறிமுகப்படுத்துதல் மற்றும் பிரவேச சீட்டுக்களை விநியோகித்தல், பணம் அறவிடல் நடவடிக்கைகளுக்காக டிஜிட்டல் முறைமையை அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

மிகச் சிறந்த சேவையை வழங்குவதற்கான முறைமையாக பஸ், ரயில், வாடகை வாகனங்கள் சேவையிலீடுபடுத்தப்படும்போது மொபைல் எப் அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கை ஏனைய நாடுகளை விட பின்னடைவான நிலையிலேயே காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அதிகரித்து வரும் போக்குவரத்து நெருக்கடி காரணமாக பிரயாணத்திற்கான காலம், பயண செலவுகள் அதிகரிப்பதுடன் சூழல் மாசடைவுக்கும் அது வழிவகுக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நபிகளாரின் வாழ்க்கை தத்துவத்தை சமூக நலனுக்காக பயன்படுத்துவோம்



மனிதநேயம் நிறைந்த உயர்ந்த மானுடப் பெறுமானங்களை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நபிகளாரின் பிறந்தநாளை, உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும் சமயக் கிரியைகளுடனும் கொண்டாடுகின்றனர். இவ்வேளையில், அவர் போதித்த வாழ்க்கைத் தத்துவத்தின் மூலம் சமூகத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே அவரை கௌரவிப்பதற்கான சரியான வழியாகும்.

சுபீட்சம், விடுதலை, சமாதானம், மகிழ்ச்சி மற்றும் மன அமைதி ஆகியவற்றைக் கொண்டு வரும் ஒரு முழுமையான வாழ்க்கை முறையை, மனித குலத்திற்கு வழங்கிய நபிகளாரின் மனிதாபிமான வாழ்க்கைத் தத்துவத்தை சமூக நன்மைக்காக முன்னெப்போதையும் விட பயன்படுத்த வேண்டிய காலகட்டம் இதுவாகும்.

உலக மக்களால் போற்றப்படும் நபிகளாரின் வாழ்க்கை முன்மாதிரிகளை மதிக்கும் இலங்கை உட்பட, உலகெங்கிலும் வாழும் இஸ்லாமியர்களின் நல்வாழ்வுக்கு எனது பிரார்த்தனைகள்.

# ஒழுக்கத்தை தனது வாழ்வாக பின்பற்றியவர் முஹம்மத் நபி

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மீலாத் தின வாழ்த்து



தர்மம், ஒழுக்கத்தை தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து மனித நேயம், நீதி மற்றும் ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப அர்ப்பணித்த நபிகளாரின் பிறந்த நாள் முழு உலகிலும் கொண்டாடப்படுகின்றது. இன்றைய நாளில் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு மீலாத் தின நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதாக புத்தசாசன மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க விடுத்துள்ள மீலாதுன் நபி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, முஹம்மத் நபி அவர்கள் 40 வயதாக இருந்தபோது இறைவன் நபியாகத் தேர்ந்தெடுத்தான். மேலும் அவர் இஸ்லாத்தின் இறுதி நபி என்று அறியப்படுகிறார். இறைகட்டளைகளை பின்பற்றி மக்களை நல்வழிப்படுத்துவது அவரின் போதனைகளாக இருந்தது. இலங்கை முஸ்லிம்கள் நபிகள் நாயகத்தின் போதனைகளை பின்பற்றி நல்லதொரு சமுதாயத்தை கட்டியெழுப்ப இனம், மதம், சாதி அல்லது வேறு எந்த வேறுபாடும் இல்லாமல் முன்னோடியாக செயற்படுவது தேசத்தின் பாக்கியம் எனலாம்.

வருடாந்தம் கொண்டாடப்படும் நபிகள் நாயகத்தின் பிறந்த நாளை முன்னிட்டு, மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தீவிரவாதமில்லாமல் மிதமான வழியில் அமைதி மற்றும் தியாகத்துடன் நாம் அனைவரும் ஒன்றிணைந்து சிறந்த புரிந்துணர்வுடன் பணியாற்ற முன்வர வேண்டும் என அமைச்சர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# சமூகங்களின் சகவாழ்வுச் செயற்பாடுகளை தத்துவரீதியாக உணர்த்திய உத்தமர் நபிகளார்



இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மத் நபி நாயகத்தின் பிறந்த தினமான மீலாதுன் நபி தினம் இன்றாகும்.

உலகிற்கு ஓர் அருட்கொடையாக அனுப்பப்பட்ட, சகல மனிதர்களும் செயல்களில் மிகச் சிறந்த செயலை ஆற்றுவதற்கு வழிகாட்டிய, காலங்களால் மாறாத உன்னத போதனைகளை மானிடத்திற்கு ஒப்புவித்த முஹம்மது நபிகள் நாயகம் அவர்கள் என்றென்றும் போற்றத்தக்கவர்.

“நம்பிக்கைக்குரியவர்", "அடைக்கலம் அளிப்பவர்", "வாய்மையாளர்" எனப் பொருள்படும்,"அல் அமீன்" எனும் சிறப்புப் பெயர் கொண்டு அவர்மீது அன்பு கொண்ட பொதுமக்களால் அழைக்கப்பட்டார் நபிகளார். ஏழைகளின் மீது இரக்கம் காட்டுபவராகவும்,

ஆதரவற்றோரை அரவணைத்து ஆதரவுக்கரம் நீட்டுபவராகவும் கருணையின் அடையாளமாகவும் திகழ்ந்தவர் இறைதூதர் முஹம்மது நபி.

அண்ணல் நபிகளாரின் சீரிய போதனைகளும்,சிறந்த அறிவுரைகளும்,செழுமையான வழிகாட்டுதல்களும், வாழ்நாளில் கடைப்பிடிக்க வேண்டியவை மட்டுமின்றி, பொன்னைப்போல் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும்.

இறையச்சத்தின் மூலமே மனித குலத்தை நல்வழிப்படுத்த இயலும் என்பது அவரின் நம்பிக்கையாகும்.

இறைவனுக்கு மட்டுமே அஞ்சுதல் வேண்டும் என போதித்த நபிகள் நாயகம் வேறு எதற்காகவும் அஞ்சிடத் தேவையில்லை என்றும், மனிதனுக்கு மனிதன் அஞ்சவே கூடாதென்றும் போதனைகள் வழங்கினார்.

இஸ்லாத்தின் தூதைப் போலவே அவரது போதனைகளும் உலக வாழ் மக்கள் அனைவரையும் சார்ந்ததாக அமைந்துள்ளன. அன்னாரது போதனைகள் காலத்தால் முன்மாதிரிமிக்கவை.

நபிகளார் ஆன்மீகத் துறையில் மட்டுமன்றி சமூகவியல் ஒழுங்கிலும் மாபெரும் புரட்சியைத் தோற்றுவித்தவராவார்.

அவர்கள் நிகழ்த்திய மது ஒழிப்பு, பாலின சமத்துவத்திற்கான நடவடிக்கை, வர்த்தக வியாபார நடவடிக்கைகள் குறித்து எண்ணிப்பாருங்கள். இன்றும் வட துருவ நாடுகள், தென் துருவ நாடுகள் என்று உலகமே இதற்கான நிலைபேறான தீர்வுகளை தேடிக்கொண்டிருக்கிறது.

நிலைபேறான போதனைகளை நபிகள் நாயகத்தின் வாழ்வியலை வாசிக்கும் போது நுகர்ந்து கொள்ளலாம்.

அன்னாரது போதனைகளை வாழ்வியலாக்க இந்நாளில் உறுதிபூணுவோம்.

நன்மைகளின் பக்கமும், நலவுகளின் பக்கமும் விரையுமாறு போதித்த அன்னார், வெறுமனே ஆன்மீகத்துடன் மாத்திரம் வரையறுக்காது சமூகவியல் பரப்பில் செயலாற்றுகைக்கான உந்துதலையும் வழங்கினார்.நாட்டில் நலவுகளை மேலோங்கச் செய்ய நபிகள் நாயகம் வழங்கிய போதனைகள் பொருட்பொலிவு மிகுந்தவையாகும்.

சமாதானம், அமைதி, ஒற்றுமை, சகவாழ்வு, ஆட்சி, ஜனநாயகம் உட்பட மனித வாழ்வுக்கான சகல துறைகளிலும் நபிகளார் வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார்.

அன்னாரையும் அன்னாரது உன்னத போதனைகளையும் நினைவு கூர்ந்தும் இலங்கை முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து உலக வாழ் இஸ்லாமிய சமூகத்தினருக்கும் எனது "மீலாதுன் நபி" வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# மாநபியின் வழியில் சகவாழ்வுக்கு உழைத்து ஐக்கியம் காப்போம்



மீலாதுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த நாளை கொண்டாடும், அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகளை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் !

அன்பு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த நாளான இன்று, தாய் நாடான இலங்கையின் வளர்ச்சிக்காக எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவிடம் பிரார்த்திப்போம். எல்லாம் வல்ல அல்லாஹ் இவ்வருடம் நம் அனைவருக்கும் புனித ரபீஉல் அவ்வல் மாதத்தில் மவ்லிதுர் ரசூல் மஜ்லிஸை 12 நாட்கள் நடாத்த உதவினான். நமது உயிரிலும் மேலான நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வரலாற்றை ஓதி மக்களுக்கு உணவு வழங்கும் பாக்கியமும் கிடைத்தது. எல்லாப் புகழும் இறைவனுக்கே அல்ஹம்துலில்லாஹ்!

நமது அன்பிற்குரிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள், ஸலாத்தை பரப்புங்கள், ஜாதி, மத வேறுபாடின்றி மக்களுக்கு உணவு வழங்குங்கள், இந்த புனித மாதம் இந் நல்ல செயல்களைச் செய்ய ஒரு நல்ல வாய்ப்பாகும். இந்த மீலாதுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தநாளை கொண்டாடும் அனைத்து இஸ்லாமியர்களும் இந்த நன்னாளில் நமது நாட்டில் உள்ள அனைத்து சமூகத்தினருடனும் அமைதியுடனும், சகோதரத்துவத்துடனும், நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும். எனவே, நாம் நமது அண்டை வீட்டார்களுக்கும் மற்றும் ஏழை மக்களுக்குக்கும் ஜாதி பேதம் பாராமல் உதவுவோம். இந்த புனித நாளில் அவர்களை நன்றாக நடத்துவதும் அவர்களின் சிரமங்களுக்கு உதவுவதும் மிகவும் சிறந்ததாகும்.

பல்சமய, கலாசார நாடான இலங்கையில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப இந்த புனித நாளில் நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்.

# நபிகளாரை நினைவு கூர்வதில் உளத்திருப்தி கொள்வோம்



இறைத்தூதர் முஹம்மது நபியின் இலட்சியங்கள் மானிடனின் ஈடேற்றத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், அவரது பிறந்த தினத்தை (மீலாத்) நினைவுகூர்வதில் உளத்திருப்தியுறுவதாக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார். மீலாத் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முஹம்மது நபியின் பிறப்பிலிருந்து அவரது மறைவு வரைக்கும் நடந்தவைகள் அற்புதங்கள் தான்.63 வருட அவரது வாழ்வு இன்று வரைக்கும் வழிகாட்டியாகப் பின்பற்றப்படுகிறது. புனித அல்குர்ஆனை புரிந்துகொள்வதற்கு நபியவர்களின் ஸீராவே (வாழ்வு) அடிப்படை. நபியை பின்பற்றாத நல்லமல்களுக்கு அல்லாஹ்விடம் எந்தப் பெறுமானங்களும் இல்லை.இந்தளவு முஹம்மது நபியின் மகத்துவம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்றைய நவீன உலகம் அவரைப் புரிந்துகொள்வதற்கு எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்கப் பிரார்த்திக்கிறேன். முஸ்லிம்களின் முன்மாதிரிகள்தான் இம் முயற்சிகள் வெற்றியளிக்க வழிகோலும்.

கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில்,நமது நம்பிக்கைகளை சிதைக்க எடுக்கப்படும் சதிகளைத் தகர்த்தெறியும் தைரியம் முஸ்லிம்களிடம் இருப்பது அவசியம். இவ்வாறு கொண்டாடப்படும் மீலாத் தினங்கள் மற்றும் நபியின் புகழ்பாடும் மஸ்ஜிதுகளூடாகவே இத்தைரியங்களை வளர்க்கலாம். எனவே,புனித மீலாத் தினத்தில் நபி வழி நடந்து, இஸ்லாத்தின் கண்ணியத்தை உலகறியச் செய்ய முஸ்லிம்கள் முன்வர வேண்டும். ஈமானின் உறுதியில் இப்பணிக்கு முயற்சிப்போம்.

# முன்னாள் எம்பி. முத்துஹெட்டிகம பிணையில் விடுவிப்பு

## காலி பிரதம நீதவான் உத்தரவு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகமவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வாகனமொன்றுக்கு உதிரிப்பாகங்களை பொருத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிஷாந்த முத்துஹெட்டிகம பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் அவரை விடுவிக்க காலி பிரதம நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

காலி ஓபாத பிரதேசத்தில் கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் திகதி இலக்கத்தகடில்லாத ஜீப் ரக வாகனம் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பில், வாகனத்தின் உரிமையாளரெனக் கூறப்படும் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம கைதுசெய்யப்பட்டிருந்தார்.



கனடா, டொரன்டோ நகரில் இயங்கும் இந்திய வம்சாவளி இலங்கை தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இணைந்து, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாருக்கு வரவேற்பளித்தபோது பிடிக்கப்பட்ட படம். இந்சந்திப்பில் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# நான்கு வயதில் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி கட்டாயம்

## கல்வியமைச்சர்


இலவசக் கல்வியைக் கொண்ட உலகின் ஒரு சில நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறி, முதலாம் ஆண்டு முதல் பல்கலைக்கழகம் வரை இலவச கல்வி வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்தும் அதே வேளையில், நான்கு வயதை எட்டும் அனைத்து குழந்தைகளுக்கும் சிறுவயது கல்வி கட்டாயமாக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கட்டணம் செலுத்த முடியாத குழந்தைகளின் சார்பில் அரசு தலையிட்டு, தேவையின் அடிப்படையில், இடவசதி உள்ள ஆரம்ப பாடசாலைகளில் குழந்தை பருவ வளர்ச்சி மையங்களை நடத்தலாம்.

மூடப்படும் சவாலை எதிர்கொள்ளும் பாடசாலைகளுக்கு இது ஒரு தீர்வாக இருக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் குழந்தைகளின் முறையான ஆரம்ப குழந்தை பருவ வளர்ச்சியே கல்வி மாற்ற சீர்திருத்தங்களில் வெற்றி பெறுவதற்கான மிக அடிப்படையான படியாகும்.

பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு மாதத்தை முன்னிட்டு பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



# 39 இ.போ.ச.டிப்போக்களில் 30 டிப்போக்கள் இன்று இலாபமீட்டும் நிலையில்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிய தலைவரை நியமிக்கும் போது இலங்கை போக்குவரத்து சபையின் 39 டிப்போக்களில் பணியாற்றுபவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும் போதிய வருமானம் இருக்கவில்லை. தற்போது 09 டிப்போக்களுக்கு மாத்திரமே சம்பளம் வழங்க முடியாதுள்ளது. ஏனைய டிப்போக்கள் போதுமான வருமானத்தை பெறுகின்றன என போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர்அண்மையில் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சில் நடைபெற்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிதாக சாரதிகளையும் நடத்துனர்களையும் நியமிப்பதற்கான நியமன கடிதத்தை வழங்கும் போதே இதனை தெரிவித்தார்.

# அரிசி இறக்குமதிக்கான அவசியம் கிடையாது

## தேவைக்கு அதிகமான அரிசி கையிருப்பில்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டில் தேவைக்கு அதிகமாக அரிசி கையிருப்பு காணப்படுவதால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய, அவசியம் கிடையாதென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டின் தேவையை விட ஏழு இலட்சம் மெற்றிக்தொன் அரிசி மேலதிகமாக உள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த பெரும் போகம் மற்றும் சிறு போகம் மூலம் மொத்தமாக 52 இலட்சம் மெற்றிக்தொன், நெல் கிடைத்துள்ளதாகவும் இதன் மூலம் 31 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டிற்கு வருடாந்தம் 24 லட்சம் மெட்ரிக் தொன் அரிசி தேவைப்படுகிறது. இந்த வகையில் ஏழு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி தற்போது மேலதிகமாகவே காணப்படுகின்றது.

# மருதானையில் 'சப்த ஸ்வர லய இசை விழா –2023'

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பாளர், சங்கீத கலை வித்தகர் மற்றும் கலைச்சுடர் ஶ்ரீமதி அனுஷா மொரயஸின் ஏற்பாட்டில் 'சப்த ஸ்வர லய இசை விழா 2023' எதிர்வரும் 6ஆம் திகதி 4.00 மணிக்கு கொழும்பு10, மருதானை டவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது கர்நாடக இசை, வீணை வாத்தியம், வயலின் இசை, பரத கலாசார நிகழ்வு ஆகியவை நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நவாலியூர் சோமசுந்தரம் புலவரின் பேரனும் பொறியியலாளருமான லயன் ஷண்குகவரதன் கலந்துகொள்ளவுள்ளார்.

விசேட விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதியின் இந்துசமய ஒருங்கிணைப்பாளர், சிவநெறிக் காவலர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா, கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஸ்ரீமதி மேரி ரெஜினா கவிதா, ஸ்ரீசத்தியசாய் மற்றும் இலங்கைக்கான சீரடிசாய் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் எஸ்.என்.உதயநாயகம், தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்சேவை மற்றும் தென்றல் அலைவரிசையின் முன்னாள் கட்டுப்பாட்டாளர் ராஜ புத்திரன் யோகராஜன், பிரிஜ் அக்கடமியின் பணிப்பாளர் துரைரட்ணம் ஸ்ரீசுந்தரன், கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்தின் உப அதிபர் திருமதி மைதிலி உதயசெல்வம், கொழும்பு ஸ்ரீசத்யசாய் நிலையத்தின் மகளிர் அணித்தலைவி திருமதி சர்வகுண தேவி சண்முகானந்தன்,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அமைப்பாளர் திருமதி கலைமகள் மகேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# புதிய தபால் சேவை அதிகாரிகளுக்கு நியமனம்

133 தொழில்நுட்பம் அல்லாத கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் சேவை தர தபால் சேவை அதிகாரிகள் மற்றும் 26 ஆரம்ப உத்தியோக தர தபாற் சேவை சாரதிகளுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு பதில் ஊடகத்துறை அமைச்சர் சாந்த பண்டாரவின் தலைமையில் நேற்று தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் அமைச்சர் சாந்த பண்டார மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெலப்பிட்டவும் படத்தில் காணப்படுகின்றார்



# கடும் நிபந்தனைகளுடன் இந்திய மீனவர்கள் விடுதலை

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட போது, கைதான 19 இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வழக்கு ஊர்காவற்துறை நீதவான் கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கொள்ளப்பட்டது. இதன்போது மீனவர்களை 05 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை அடிப்படையில், நிபந்தனைகளுடன் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார். அத்துடன் கைப்பற்றப்பட்ட விசைப் படகுகளை விடுவிக்க தீர்மானிக்கப்பட்டதாக நீரியல் வள திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்தார்.

## புதிய கொடிய....

சூட்டப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் தொற்று, மக்களை பெரும் அவதிக்குள்ளாக்கியது. தற்போது இத்தொற்று சற்று குறைந்து, மக்கள் வாழ்க்கை நிலை சகஜமாகியுள்ளது.

இந்நிலையிலேயே, கொரோனா வைரஸை விட கொடிய வைரஸ் பாதிப்பு வரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## 50 எரிபொருள்...

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சினோபெக் நிறுவனத்திற்கு 150 எரிபொருள் நிலையங்களை வழங்கியுள்ளது. அவற்றில் 145 எரிபொருள் நிலையங்களை பொறுப்பேற்பதற்கு அந்த நிறுவனம் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளது.

தற்போது மேலும் 50 எரிபொருள் நிலையங்கள் அமைப்பதற்காக அந நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், இந்த எரிபொருள் நிலையங்களில் எண்ணிக்கையை 200 ஆக மட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லையென குறிப்பிட்டுள்ள அவர், அது தொடர்பில் ஆட்சேபனைகளிருந்தால், வழங்குநர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தங்களை பரிசீலிக்கத் தயாராக உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## போதைப்பொருள்...

ஆண்டில் இலங்கை கடற்பரப்பில் வைத்து மீன்பிடிப் படகு மூலம் 152 கிலோ ஹெராயின் போதைப் பொருளை நாட்டுக்குள் கொண்டு வர முயன்ற குற்றத்துக்காக இவர்கள் ஐந்து பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இரத்மலானை பிரதேசத்தில் கடற்பரப்பில் வைத்து கடற் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சட்ட மாஅதிபரால் இவர்களுக்கு எதிரான வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நீண்ட கால விசாரணைகளுக்குப் பின்பு, நேற்று இக்குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## அம்பாறையில்...

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 4652 ஏக்கர் காணிகளை

வனவிலங்குகள் வன பரிபாலன திணைக்களம் சுவீகரித்தது.

இந்த காணிகளை மீட்டெடுக்க விவசாயிகள் மேற்கொண்ட பிரயத்தனங்கள், கஸ்டங்களை நான் அறிவேன்.இதனால்,

இவர்களின் காணிகளை விடுவிப்பதற்காக பல்வேறு வழிகளிலும் முயற்சித்தேன். பாராளுமன்ற உறுப்பினராக

தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து விவசாயிகள் முதற்கொண்டு HEO நிறுவனம் உள்ளிட்ட முக்கிய தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து இதற்காக பணியாற்றினோம்.

அடிக்கடி அதிகாரிகள் மாறல் மற்றும் அமைச்சுக்கள் மாறல் போன்ற காரணங்களால்,மீண்டும், மீண்டும் முயற்சிகளைச் செய்ய வேண்டியிருந்தது. இந்நிலையில் தான்,முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வட்டமடு, வளத்தாப்பிட்டி,வேகாமம், கிரான்கோவை, பள்ளியடிவட்டை, உடகோவை, மதீனாநகர், ஹிஜ்ரத் நகர்,

புதுவெளி, புலிபிடித்த சேனை, கச்சக்கொடி, துக்வெள்ள, செங்காமம், தங்கப்பிள்ளை கனத்தை, பூவரசையடி, கிரான்கோமாரி, செல்வவெளி, முதுரைதீவு, பெரிய முருங்கந்தனை, கூனப்பன்கேணி , கலுகொல்ல, ஆத்தியடித் தோட்டம்,ஒலுவில் அஸ்ரப் நகர் போன்ற அம்பாறை மாவட்டத்தின் சகல காணிகளையும் விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளன. அம்பாறை கச்சேரியில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகள் பங்கேற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.உரிமை அரசியலில் முஸ்லிம்கள் வெற்றி பெற முடியாது என்று ஆரூடம் கூறியோர் உள்ளிட்ட சகலருக்கும் வாழ்த்துக்கள்.இவ்வாறு அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 20 வருடங்களின்...

மொஹமட் ஹம்ஸா, 49 வயதான அப்துல் கரீம் மொஹமட் ரவிஸ்தீன், 59 வயதான மொஹமட் மவிஸ் மொஹமட், 45 வயதான மொஹமட் ரியாஸ்தீன் மொஹமட், 47 வயதான மொஹமட் ஜிப்ரி மொஹமட் ஜின்னா, 43 வயதான மொகமட் ஜிப்ரி மொஹமட் பிர்தௌஸ், 44 வயதான மொஹமட் சாகிர் மொஹமட் சியாம், 45 வயதான மொஹமட் நிலாப்தீன் மொஹமட் அஜீல் ஆகிய எட்டு பேருகே, களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன மரண தண்டனை வழங்கி நேற்று தீர்ப்பளித்தார்.

களுத்துறை தெற்கு பகுதியில் 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில், நபர் ஒருவரை கூரிய ஆயுதங்களால் குத்திக் கொலை செய்த சம்பவம் தொடர்பிலேயே மேற்படி 08 சந்தேக நபர்களுக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி 08 சந்தேக நபர்களுக்கு எதிராக, சட்ட மாஆதிபர் களுத்துறை மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். சுமார் 20 வருடங்கள் இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணையின் பின்னர் நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. களுத்துறை நீதிமன்ற வளாகத்தில் பெருமளவான மக்கள் திரண்டு தீர்ப்பை எதிர்பார்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடற்றொழிலாளர்...

தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த கடந்த 20 வருட காலமாக முயற்சித்து வருகின்ற போதிலும், இதனை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லையெனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று புதன்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் பி.எம். எஸ். சார்ள்ஸ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு, கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகளினால் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் தமிழக கடற்றொழிலாளர்களை கட்டுப்படுத்தும், செயற்பாட்டை கடற்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போதிலும், அவர்களை கைது செய்யும் செயற்பாட்டில் கடற்படையினர் தயக்கம் காட்டுகின்றனர். கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த, கடந்த 20 வருட காலமாக, தன்னால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனினும் குறித்த அத்துமீறலை கட்டுப்படுத்த பல பேச்சுவார்த்தைகளை கச்சதீவு பகுதியில் ஏற்பாடு செய்திருந்தோம். அதில், நான் கலந்து கொண்டேன். ஆனால் எவ்விதமான முடிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## தனிநபர் வரியை...

பொருளாதார மற்றும் பௌதீக திட்டமிடலை அமுல்படுத்துவதற்கான துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே கருத்து தெரிவித்துள்ளார்.

இது பற்றித் தெரிவித்த அவர். இலங்கை சுங்க மற்றும் கலால் திணைக்களத்தின் திறமையின்மை மற்றும் முறைகேடு காரணமாக, அரசாங்கத்துக்கு வருடாந்தம் சுமார் 500 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது. அரசின் வரி வருவாயை அதிகரிக்கும் வகையில் செயல்படாத அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றார். மேலும், தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டமிடல் அமுலாக்கத்திற்கான துறைசார் கண்காணிப்புக் குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்துள்ளது.

## பேர்லின் குளோபல்" ...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர்கள கலந்துரையாடலில் ஆரம்ப உரையை நிகழ்த்தவுள்ளார்.

இம்மாநாட்டில், ஜேர்மன் சான்ஸலர் ஒலாப் ஸ்கொல்ஸ் (Olaf Scholz), பெல்ஜிய பிரதமர் அலெக்சாண்டர் டீ குரூ (Alexander de Croo), கசகஸ்தான் ஜனாதிபதி கெசெம் ஜோமார்ட் டோகயெவ் (KassymJomart Tokayev), ஐரோப்பிய கவுன்ஸில் தலைவர் சார்ள்ஸ் மிஷெல் (KassymJomart Tokayev) உள்ளிட்டவர்களுடன் பல நாடுகளின் தலைவர்கள், வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள பொருளாதார கொள்கை மற்றும் நிதிமயமாக்கல் நிபுணர்களும் கலந்து கொள்வர். அதேபோல் இக்கலந்துரையாடலில் உலகின் முக்கிய நிறுவனங்கள் பலவற்றின் நிறைவேற்று அதிகாரிகளும் பங்குபற்றவுள்ளனர்.

கிழக்கு ஜேர்மனிய அரச கவுன்ஸில் மற்றும் ஐக்கிய ஜேர்மனியின் பெடரல் சான்ஸலரின் வாசஸ்தலமான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஐரோப்பிய முகாமைத்துவ மற்றும் தொழினுட்ப கல்லூரி (ESMT) மண்டபத்தில் இம் மாநாடு நடத்தப்படவுள்ளமை சிறப்பம்சமாகும்.

ஜேர்மனுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, ஜேர்மன் சான்ஸ்லர் ஒலாப் ஸ்கொல்ஸ் (Olaf Scholz), ஜேர்மனியின் பிரதான அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜேர்மன் வணிக மற்றும் தொழில் சபையின் (DHIK) உறுப்பினர்களையும் ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்த உத்தியோகபூர்வ சந்திப்பின் நிறைவில் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜேர்மன் சான்ஸ்லரின் வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு கொள்கை தொடர்பிலான ஆலோசகர் ஜென்ஸ் பிளொண்டரை (Jens Pl□tner) சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

## ஈராக் திருமண...

தற்போது வெளியிடப்பட்டுள்ளன. எதிர்பாராத விபத்தில் பாதிக்கப்பட்டோருக்குத் தேவையான உதவிகளை வழங்க, சகல வகையிலும் முயற்சி எடுக்கும்படி ஈராக்கியப் பிரதமர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. ஆனால், சம்பவ இடத்தில் வாணவேடிக்கையால் தீ ஏற்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## முஹம்மது நபிகளாரின் போதனை...

தூதரான முஹம்மது நபி அவர்கள், அல்லாஹ்வின் கடைசி இறைத் தூதராவார்.

அன்றைய அராபிய சமூகத்தில் இஸ்லாத்தின் தூதை முன்வைப்பதில் நபிகளார் முகங்கொடுத்த கடினமான அனுபவங்கள், கொஞ்சநஞ்சமல்ல. அப்படிப்பட்ட தருணத்திலும் பொறுமையும் மௌனமுமே அவரின் கூரிய ஆயுதங்களாக இருந்தன. நம்பிக்கை மற்றும் மனித நேயத்திற்காக முஹம்மது நபி செய்த அளவற்ற தியாகத்தின் விளைவாக, அவரால் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடிந்தது.

பரஸ்பர புரிதல், சகோதரத்துவம், ஒருவருக்கொருவர் உதவி, , நேர்மையென வாழ்நாள் முழுவதும் அவர்,காத்து வந்த பண்புகளை , நபிகள் நாயகத்தின் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம், நமது வாழ்வின் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். மேலும், அவரது தத்துவத்தை மேலும் சமூகமயமாக்கவும், நல்லிணக்கத்தை உருவாக்கவும் பணியாற்றுவது அவருக்கு செய்யக் கூடிய மிக உயர்ந்த மரியாதை என்று நான் நம்புகிறேன்.

நபிகள் நாயகம் காட்டிய விழுமியங்களுக்கு ஏற்ப, நாடு எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் முறியடித்து 2048 ஆம் ஆண்டளவில் வளர்ந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கான பாதையை வலுப்படுத்த அனைத்து இலங்கை முஸ்லிம் சகோதர சகோதரிகளையும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இனிய மீலாதுன் நபி தின வாழ்த்துக்கள்!

## ரயில் பயணச்சீட்டு...

கொரோனா தொற்று காலத்தில் ரயில் பயணிகளின் பயணச்சீட்டு பரிசோதனை நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. இதனால், பயணச்சீட்டின்றி ரயிலில் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்ததாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் மருதானை ரயில் நிலையத்தில் மாத்திரம் பயணச்சீட்டின்றி பயணித்த பயணிகளிடமிருந்து 02 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பயணச்சீட்டு பெறாமல் ரயிலில் பயணித்த 72 பயணிகளிடமிருந்தே இந்த அபராதம் அறவிடப்பட்டதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் கசுன் சாமர தெரிவித்துள்ளார்.

## நெருக்கடியான...

நேற்றைய தினம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியது.

அந்த சந்தர்ப்பத்திலேயே அந்தக் குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், விரைவில் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டுக்கு வருவதற்காக முதலாவது மீளாய்வுக் குழு தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றது.

அத்துடன் நெருக்கடியான இந்த காலகட்டத்தில் இலங்கைக்கு உதவுவதற்கு நாம் விருப்பத்துடன் உள்ளோம்.

முதலாவது மீளாய்வில் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு மேலும் சில காலம் அவசியமாகின்றது.

அதற்கிணங்க இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் மூலம் இணக்கப்பாடு காணப்பட்டுள்ள 2.9 பில்லியன் டொலர் கடன் தொகையில் இரண்டாவது தவணை வழங்கப்படுவது தாமதமாகலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், அதற்கான காலவரையறையை தெரிவிக்கமுடியாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடினமான எனினும் மிகவும் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பாராட்டுத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

பணவீக்கமும் குறைவடைந்துள்ள நிலையில் பொருளாதார நிலையான தன்மைக்கான தற்காலிக அறிகுறிகள் தென்படுவதால் இத்தகைய முயற்சிகள் பலன் அளிக்கின்றன.

2022 செப்டம்பர் மாதத்தில் 70 சத வீதமாக இருந்த மொத்த சர்வதேச கையிருப்பு இந்த ஆண்டு மார்ச் மற்றும் ஜூன் மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் 1.5 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு நீங்கியுள்ளதுடன் நிலையான முன்னேற்றம் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை நோக்கிய சீர்திருத்த வேகம் அதிகரிப்பது முக்கியமாகும் என்றும் அந்த குழு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல், வறுமை நிலையில் உள்ளோர் மற்றும் பாதிக்கப் ப்பட்டுள்ள மக்களைப் பாதுகாத்தல், ஊழல் மோசடிகளுக்கு தீர்வு காணுதல், பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைகளை மீட்டெடுப்பதிலும் இலங்கை தொடர்ந்தும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த தூதுக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது. அதன் போது சர்வதேச நாணய நிதியத்தின் பல நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அந்த பிரதிநிதிகள் உள்ளூர் கடன் மறு சீரமைப்பின் முன்னேற்றம் தொடர்பில் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். அரசாங்கத்தின் இந்த வருட வருமான பற்றாக்குறை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தமது கவலையை வெளியிட்டுள்ளதுடன் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் நிதியத்தின் தலைமை செயலகத்துடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர்கள் அதன் போது குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## விமான நிலையத்தில்...

தெரிவித்தனர். தங்க நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுகளை துபாயிலிருந்து சட்ட விரோதமாக இவர்கள் கொண்டுவந்துள்ளனர். கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று அதிகாலை வந்தடைந்த இவர்கள் விமானப் பயணிகள் வருகை முனையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இந்த ஐந்து நபர்களும் துபாயிலிருந்து இரண்டு விமானங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் வசமிருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் தங்க பிஸ்கட்களின் பெறுமதி 12 கோடியே 30 இலட்சமாகும்.

கொழும்பு பிரதேசத்தை வதிவிடமாகக்கொண்ட இவர்கள், தொடர்ச்சியாக இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. மேற்படி நபர்கள் தமது உடலிலும், கைப்பைகளிலும் இவற்றை சூசகமாக மறைத்து கொண்டு வந்துள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.







கல்விச்சுற்றுலா மேற்கொண்டு நேற்று (27) லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட வருகை தந்த அநு./ஹொராப்பொல முஸ்லிம் வித்தியாலய மாணவ, மாணவிகள் லேக்ஹவுஸ் முன்றலில் ஆசிரியர் சகிதம் எடுத்துக்கொண்ட படம்.

## கிழக்கின் குரல்

# நுளம்புகள் பெருக துணை போவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

**ஒலுவில் விசேட நிருபர்**



கல்முனை பிராந்தியத்தில் டெங்குநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவாக காணிகளை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

அம்பாறையில் தற்போது பருவமழைக் காலம் ஆரம்பித்துள்ளதால் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தோறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார், சிவில் பாதுகாப்புக் குழுவினர், டெங்கொழிப்புச் செயலணி, சமூகமட்ட தலைவர்கள் ஆகியோர் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். பொதுமக்கள் வாரத்தில் ஒருநாள் தங்களது வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் துப்புரவு செய்யுமாறு கேட்டுக்கொண்ட அவர், டெங்கொழிப்புத் தொடர்பாக ஆலோசனைகள் தேவைப்படும் பட்சத்தில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை நாட முடியுமெனவும், தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும், அவர் கேட்டுக் கொண்டார்.

# இஸ்லாமிய பெருமக்கள் அனைவருக்கும் இனிய 'மீலாதுந் நபி' நல்வாழ்த்துகள்!

### கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்



இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் உதவி செய்ய வேண்டுமென்பதை இஸ்லாமிய மார்க்கம் வலியுறுத்துகிறது. அத்தகைய உயரிய நோக்கத்துடன் வாழ்கின்ற இஸ்லாமிய பெருமக்கள் 'மீலாது நபி' எனும் அண்ணல் நபிகள் நாயகம் பிறந்தநாளை உலகெங்கும் மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். இந்த இனியவேளையில் இஸ்லாமிய பெருமக்கள் அனைவருக்கும் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"உலகம் செழிக்கவும் மானுடம் தழைக்கவும் சமுதாயத்தில் சாந்தியும் சமாதானமும் சகோதரத்துவமும் பெருக வேண்டுமென்பது அண்ணல் நபிகளின் அருட்போதனையாகும்.

நபிகள் நாயகத்தின் பிறந்தநாளன்று அவர்களின் போதனைப்படி, அன்பு பெருகவும் அமைதி நிலைக்கவும் சமரசம் உலவவும் சகோதரத்துவம் தழைக்கவும் அயராது உழைத்திட உறுதி ஏற்போம் எனக்கூறி, இஸ்லாமிய பெருமக்கள் அனைவருக்கும் எனது இனிய 'மீலாது நபி' நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை மனமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# சம்மாந்துறையில் அஹதியா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு;

### கிழக்கு ஆளுநர் செந்தில் கௌரவிப்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

சம்மாந்துறை அஹதியா பாடசாலைகளினுடைய கூட்டிணையத்தின் ஏற்பாட்டில் அஹதியா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை நகர மண்டபத்தில் நேற்று புதன்கிழமை (27) நடைபெற்றது.

மேற்படி அமைப்பின் தலைவர், ஆசிரிய ஆலோசகர் இசட்.எம். றிஸ்வி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டார். இதன்போது, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன், அவருக்கு நினைவுச்சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது. சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஹனிபாவும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் அறநெறி பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகளும் நடைபெற்றன.

### மெய்வல்லுனர் போட்டியில்

# பிறந்துரைச்சேனை ஷாதுலிய்யா வித்தியாலய மாணவன் சாதனை



கந்தளாயில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட மெய்வல்லுனர் திறனாய்வு போட்டியில் பிறந்துரைச்சேனை ஷாதுலிய்யா வித்தியாலய மாணவன் என்.எம்.நஷீம் 12 வயதுப் பிரிவில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

இந்த மாணவனை பாராட்டும் நிகழ்வு, பாடசாலை அதிபர் ஜனாப் எம்.எல் .கலீல் ரஹ்மான் தலைமையில் பாடசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவனுக்கும் விளையாட்டுத்துறையில் மாணவர்களை வழிநடத்திய உடற்கல்வி ஆசிரியர் ஜமீல் ஆர் கபூரி மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான அலி அக்பர் எம்.இர்பான், வபாஸ் மொகமட் ஆகியோருக்கு அதிபர் பாராட்டுடன் வாழ்த்துத் தெரிவித்தார்.

# இக்றஹ் பாடசாலையில் சிறுவர் சந்தை நிகழ்வு

**ஆரையம்பதி தினகரன் நிருபர்**



இக்றஹ் பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் சந்தை நிகழ்வு, பாலமுனை நடுத்துறை பீச் பார்க்கில் அண்மையில் நடைபெற்றது.

பாலர் பாடசாலையின் தலைவரும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினருமான எம்.எ. எம்.சியாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிதியாக மண்முனைப்பற்று பிரதேச சபை செயலாளர் ஜே.சர்வேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு அதிதிகளினால் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# சிறுவர் தடகள போட்டியில் அஷ்ரப் பாடசாலை முதலாமிடம்

### வெற்றி பெற்ற மாணவர், பயிற்றுவித்த ஆசிரியருக்கு கௌரவிப்பு



சிறுவர் தடகள விளையாட்டுப் போட்டியில் கல்முனை வலய மட்டத்தில் தரம் 3 மற்றும் தரம் 4 பிரிவுகளில் கமு/கமு லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய மாணவர்கள் முதலாமிடத்தை பெற்றுள்ளனர்.

இதில் வெற்றி பெற்ற மாணவர்கள், பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம்.றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம்.ஆபாக் ஆகியோரை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (27) பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது, வெற்றி பெற்ற மாணவர்களும் பயிற்றுவித்த ஆசிரியர்களும் பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் பாடசாலை சமூகத்தினரால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை வலயத்துக்குட்பட்ட 5 கோட்டங்களிலிருந்து பங்குபற்றிய 10 பாடசாலைகளில் கமு/கமு லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயம் முதலாமிடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் சம்மேளன பொதுச்சபை கூட்டம்



**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினுடைய விசேட பொதுச் சபைக் கூட்டம், கிண்ணியா விஷன் ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கிண்ணியா மஜ்லிஷ் சூறா ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பொதுச் சபைக் கூட்டத்தின் போது, நிர்வாகத் தெரிவும் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 27 பேர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டதுடன், தற்காலிக தலைவராக சம்மாந்துறையைச் சேர்ந்த மூத்த உலமா ஏ.சி.ஏ.எம்.புஹாரி, தற்காலிக செயலாளராக அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன செயலாளர் அன்வர் தீன் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், யாப்புக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டதுடன், அக்குழுத் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி அனிப்லெப்பை நியமிக்கப்பட்டார்.

இரண்டு மாதங்களின் பின்னர் பொதுச் சபையை மருதமுனையில் நடத்தி யாப்பை அங்கீகரிப்பதுடன், நிரந்தர நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

# சைகை மொழியாளர் தினம்; மட்டக்களப்பில் நடைபவனி




**மட்டக்களப்பு குறூப், மட்டக்களப்பு சுழற்சி, கல்லடி குறூப் நிருபர்கள்**

சர்வதேச சைகை மொழித்திறன் தினத்தையொட்டி 10 மாவட்டங்களைச் சேர்ந்த சைகை மொழியாளர்களின் விழிப்புணர்வு நடைபவனி மட்டக்களப்பில் நேற்று புதன்கிழமை (27) நடைபெற்றது.

செவிப்புலனற்றோர் சங்கங்கள் ஏற்பாடு செய்த இந்த நடைபவனியில் ஆயிரக்கணக்கான சைகை மொழியாளர்கள் பங்குகொண்டனர். இந்த நடைபவனியானது, மட்டக்களப்பு ஞானசூரியம் சதுக்கத்திலிருந்து ஆரம்பமாகி மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தை அடைந்தது.

'செவிப்புலனற்றோர் எங்கு வேண்டுமானாலும் சைகை மொழியை பயன்படுத்தக்கூடிய உலகம் உருவாக வேண்டும் எனும் கருப்பொருளில் சர்வதேச சைகை மொழி தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நடைபவனியை தொடர்ந்து எழுச்சிக் கொண்டாட்ட நிகழ்வுகள் மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் நடைபெற்றன.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் இளம் குமுதன் வைபவ ரீதியாக இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை தமிழ் செவிப்புல வலுவற்றோர் அமைப்பின் தலைவர் கோ.வள்ளிகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், விசேட விருந்தினராக மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 12

### குறள் தரும் சிந்தனை



நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்

நண்பர்களுடன் பழகி மகிழத் தெரியாதவர்களுக்கு உலகம் என்பது பகலில் கூட இருட்டாகத்தான் இருக்கும்.

## சகவாழ்வு, நல்லிணக்கத்துக்கு வழிகாட்டிய உதாரண புருஷர்

இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் 'மீலாதுன் நபி' விழா இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. அந்த வகையில் மீலாதுன் நபி விழா இலங்கையில் தேசிய விழாவாக பிரகடனப்படுத்தப்பட்டு வருடா வருடம் அரச விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதற்கேற்ப இவ்வருட தேசிய விழா மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம் இத்தினத்தின் நிமித்தம் நாட்டின் பல பிரதேசங்களிலும் பல்வேறு சமய நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

சவூதி அரேபியாவின் மக்கா நகரில் இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்னர் பிறந்த முஹம்மத் நபி அவர்களை அன்னாரது 40 ஆவது வயதில் இறைவன் தன் இறுதித் தூதராக தேர்ந்தெடுத்தான். அன்னார் ஊடாக உலக மக்களின் மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்திற்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்கும் இறையருள் மறை அல் குர்ஆனை அருளினான்.

அல் குர்ஆனின் கட்டளைகள் வழிகாட்டல்களுக்கு அமைய போதனைகளை முன்னெடுத்த முஹம்மது நபி அவர்கள் மனிதனின் தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமூக வாழ்வுக்கான உதாரண புருஷராக விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

சிறியவர்கள், பெரியர்கள் என எல்லா மட்டத்தினருடனும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொண்ட அன்னார், அனைத்து உயிரினங்களோடும் கருணையோடும் இரக்கத்தோடும் நடந்து கொண்டுள்ளார். அன்னாரிடம் அழகிய முன்மாதிரி இருக்கின்றது என்று இறைவனே குறிப்பிட்டு வைத்திருக்கிறான்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மனித நேயத்துடன் செயற்பட்ட முஹம்மது நபி அவர்கள் தம்மைச் சார்ந்தவர்களுடன் மாத்திரமல்லாமல் ஏனைய மதங்கள், கொள்கை கோட்பாடுகளைச் சேர்ந்தவர்களுடனும் அவ்வாறே நடந்து கொண்டார்கள். குறிப்பாக ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டுள்ளார். அவர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொண்டுள்ளார்கள்.

யூத மதத்தைச் சேர்ந்தவர் ஒருவர் முஹம்மது நபியிடம் பணியாற்றியுள்ளார். அந்த சமூகத்தைச் சேர்ந்த ஒருவரின் பிரேத ஊர்வலம் நபிகளாரை கடந்து சென்ற போது அன்னார் எழுந்து நின்றார்கள். அச்சமயம் 'அப்பிரேதம் மாற்று மதத்தவருடையதே' என அவரது தோழர்கள் கூறிய போது, 'அதுவும் ஒரு உயிர்தானே' எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் அன்னாரது கவசத்தை ஒரு யூதரிடம் வைத்து விட்டு அன்னார் பொருட்களை வாங்கி இருந்தார்.

இவை மாத்திரமல்லாமல் முஹம்மது நபி அவர்கள் மக்காவில் வாழ்ந்த சமயம் அவரது எதிரிகள் அவரை கொல்ல சதித்திட்டம் தீட்டினர். அச் சமயம் இறைவனின் கட்டளைக்கு ஏற்ப மதீனாவுக்கு அன்னார் புலம் பெயர்ந்து சென்றார்கள். இந்த பயணத்திற்கு வழிகாட்டியாக அன்னார் மாற்று மதத்தைச் சேர்ந்தவர் ஒருவரையே அமர்த்திக் கொண்டார்கள்.

அதேநேரம் அமைதி, சமாதானத்தை ஊக்குவிப்பதாகவே அவரது நகர்வுகளும் செயற்பாடுகளும் அமைந்திருந்தன. குறிப்பாக மதீனாவுக்கு சென்றதும் அங்கு வாழ்ந்த அனைத்து இன, மத மக்களையும் உள்ளடக்கி மதீனா சாசனத்தை செய்தார். அந்த சாசனத்தின் ஊடாக அங்கு வாழ்ந்த அனைத்து மக்களதும் உரிமைகளும் அபிலாஷைகளும் உறுதிப்படுத்தப்பட்டன. ஹுதைபிய்யா என்ற இடத்தில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை தமக்கு பாதிப்பான ஷரத்துக்களைக் கொண்டிருந்தும் கூட அமைதி, சமாதானத்தை முன்னிலைப்படுத்தி அதற்கு அன்னார் இணங்கினார்.

இவ்வாறு மனித நேயத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் மாத்திரமல்லாமல் சகவாழ்வு, நல்லிணக்கத்திற்கும் அன்னார் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

முழு மனித சமூகத்தினதும் சுபீட்சமும் முன்னேற்றமும் தான் நபிகளார் முன்னெடுத்த இறைத்தூதின் இலக்காக இருந்தது. அதற்கேற்ப அன்னார் தம் பணிகளை முன்னெடுத்தார். அதன் ஊடாக தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வுக்கான உதாரண புருஷராக விளங்குகிறார்.

அந்த வகையில் இன்றைய காலகட்டத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அவரது அணுகுமுறைகளைக் கையாளுவதன் ஊடாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பாக நாடுகள் மத்தியில் நிலவும் முரண்பாடுகள், சந்தேகங்களை மாத்திரமல்லாமல் சமூகங்களுக்கு மத்தியிலான ஐயங்களைக் களையவும் அமைதி, சமாதான வழிமுறைகளின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம். இது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகளாகும்.

கடந்த வருடம் இலங்கை கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி தற்போது மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ளது. ஆனால் மக்களின் உண்மையான பங்களிப்புடன் பொருளாதாரம் ஒழுங்குமுறையாகக் கையாளப்பட்டிருந்தால் அவ்வாறான நெருக்கடிக்கு முகம்கொடுக்க நேர்ந்திருக்காது. அதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் அன்னார் வழங்கியுள்ளார்.

இவ்வாறு மனித சமூகத்தின் சீரானதும் ஒழுங்குமுறையானதுமான வாழ்வுக்கு தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் உள்ளடக்கியதாகவே முஹம்மது நபியின் போதனைகளும் வழிகாட்டல்களும் அமைந்துள்ளன. ஆகவே நாட்டின் சுபீட்சத்துக்கும் மக்களின் வளமான வாழ்வுக்கும் தேவையான முன்னுதாரணங்களையும் அவற்றின் ஊடாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# சகவாழ்வு நல்லெண்ணத்துக்கு நபிகளாரின் வழிகாட்டல்கள்



இன்று மீலாத் தினம்

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் மக்கா, மதீனாவில் யூதர்கள், உருவவழிபாட்டில் ஈடுபடக் கூடியவர்கள் என பல சமூகத்தவர்கள் வாழ்ந்தனர். அவர்கள் அனைவருடனும் அன்புடனும் கருணையுடனும் இரக்கத்துடனுமே நபி (ஸல்) அவர்கள் நடந்து கொண்டார்கள். அதன் ஊடாக மாற்றுமத மக்களின் உள்ளங்களிலும் அன்னார் அழகான இடத்தைப் பிடித்திருந்தார்கள்.

இன்று உலகில் இனங்களுக்கிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால் பலவிதமான குழப்பங்களும் சண்டை சச்சரவுகளும் ஏற்படுகின்றன. ஒருவரையொருவர் புரிந்து கொண்டு விட்டுக்கொடுத்து வாழாததன் விளைவே இது. மனித வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் வழிகாட்டிய நபி (ஸல்) அவர்கள் மாற்றுமத சகோதர மக்களுடனும் நல்லெண்ணத்துடனும் புரிந்துணர்வுடனும் வாழ்ந்தார்கள். அதற்கான முன்மாதிரியை வழங்கினார்கள்.

ஹுதைபியாவில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உடன்படிக்கையில் மாற்றுமத மக்களுடன் நபிகளார் எவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்து செயற்பட்டார்கள் என்பது மறைக்க முடியாத உண்மையாகும். அந்த ஒப்பந்தத்தில் சிலபகுதிகள் முஸ்லிம்களுக்கு பாதகமாய் தோன்றின. என்றாலும் அவ் ஒப்பந்தத்துக்கு அன்னார் இணங்கினார்கள்.

ஒரு தடவை அப்துல்லாஹ் பின் அம்ரு (ரழி) என்ற நபித்தோழர் வீட்டில் ஓர் ஆடு அறுக்கப்பட்டது. அவர் வீட்டுக்கு வந்தவுடன் 'நமது அண்டை வீட்டில் உள்ள யூதருக்குக் கொடுத்தீர்களா? என்று கேட்டார்கள். 'அண்டை வீட்டாரை எனது வாரிசாக அறிவித்து விடுவாரோ என்று நான் எண்ணும் அளவுக்கு ஜிப்ரீல் (அலை) எனும் வானவர் எனக்கு வலியுறுத்திக் கொண்டேயிருந்தார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதைத் தான் கேட்டதாக அவர் தெரிவித்தார். (ஆதாரம்: திர்மிதி)

இந்த நபிமொழியானது அந்நியராக இருந்தாலும் அண்டை வீட்டாருக்கு உதவி ஒத்துழைப்புக்களை நல்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. அண்டை வீட்டாரைக் கவனிப்பதில் மதத்தை அடிப்படையாகக் கொள்ளக் கூடாதென்பது நபிகளாரின் அழகிய நடைமுறையாகும்.

நபி(ஸல்) அவர்களிடம் யூதர் ஒருவர் பணிபுரிந்தார். அவர் நோய்வாய்ப்பட்ட போது அவரை சுகம் விசாரிக்கவென நபிகளார் அவரது வீட்டுக்கு சென்றார்கள். அந்த யூதப் பணியாளரின் தந்தைக்கு அருகில் அன்னார் அமர்ந்தார்கள். 'நீர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளலாமே' என்று அவரிடம் கூற அவரது தந்தையும் அருகில்தான் இருந்தார். அவ்விளைஞர் தந்தையைப் பார்த்தார். 'நபி(ஸல்) அவர்கள் கூறுவதைக் கேள்' என்று தந்தை கூறியதும் அவ்விளைஞர் இஸ்லாதை ஏற்றுக் கொண்டார். 'இவரை நரகிலிருந்து காப்பாற்றிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்' என்று கூறிக்கொண்டே நபிகளார் வெளியேறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

நபிகளாரை யூதர்கள் வஞ்சக எண்ணத்துடன் நோக்கிய காலம் அது. என்றாலும் நபிகளாரின் செயல்முறை காரணமாகவே அன்னாரை அவர்கள் நேசித்தனர். தன் பணியாளாக யூத மதத்தினர் இருக்கக்கூடிய அளவுக்கு அன்னார் பிறமதத்தவருடன் மிக இணக்கமாக நடந்து கொண்டார்கள்.

யூதர்களுடன் நபிகளார் கொடுக்கல் வாங்கல் செய்துள்ளார்கள். அவர்கள் இஸ்லாத்துக்கு வரவில்லை என்று அவர்களுடன் அன்னார் மோதிக் கொள்ளவில்லை. நபி (ஸல்) அவர்கள் தமது இரும்புக் கவசத்தை ஒரு யூதனிடம் அடமானமாக வைத்து அவனிடம் உணவுப் பொருட்களைக் கடனாக பெற்று இருந்தார்கள். (ஆதாரம்: புஹாரி)

'ஒரு தடவை நாயகம் (ஸல்) அவர்களைக் கடந்து பிரேத ஊர்வலமொன்று சென்ற போது நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். 'இது யூதருடைய பிரேதம்' என்று கூறப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'அதுவும் ஒரு உயிர் அல்லவா? என்று கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி , முஸ்லிம்)

இந்நபிமொழியானது நபி (ஸல்) அவர்கள் மாற்று மதத்தவர்களை அவர்கள் இறந்த பின்னரும் கூட மரியாதை செய்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. தம் உயர்நடத்தையால் யூதர்களின் உள்ளங்களை அன்னார் வென்றார்கள். இத்தகு செயல்களை நாமும் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.


அதேநேரம் நபி(ஸல்) அவர்களை எதிரிகள் கொல்ல சதித் திட்டம் தீட்டிய போது அல்லாஹ் தன் திருத்தூதரை உடனடியாக மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதி கொடுத்தான். அப்போது மதீனா வரை குறுக்குப் பாதையூடாகச் செல்ல வழிகாட்டியாக நபிகளார் அழைத்துச் சென்றது அப்துல்லாஹ் இப்னு உரைக்கித் என்ற முஸ்லிம் அல்லாத ஒருவரையாவார். (ஆதாரம்: புஹாரி)

ஆபத்தான சூழல், எதிரிகள் நபிகளை விரட்டிக் கொலை செய்ய முயற்சிக்கும் நிலை. அதே எதிரிகளைச் சேர்ந்த ஒருவரான அப்துல்லாஹ் இப்னு உரைக்கித் என்பவரை தாம் தப்பிச் செல்லக் கூலிக்குப் பிடித்திருந்தார்கள் என்றால் நபிகளாரின் மூலோபாயம் எத்தகையது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் மாற்று மதத்தவர்களுடன் சந்தேகங்களுடனும் ஐயங்களுடனும் நடந்துகொள்ளும் சந்தர்ப்பங்களே அதிகமாக உள்ளன. விட்டுக்கொடுக்காத தன்மையும், அவசரச் செயற்பாடும்தான் இவற்றுக்குக் காரணமாகும். நபி(ஸல்) அவர்களது வாழ்வுகாட்டும் முன்மாதிரிகள் பூரணமாகப் பின்பற்றப்பட்டால் இவ்வாறான நிலைமை ஏற்படாது.

எனவே நபிகளார் மாற்றுமதத்தினரை அன்பினால் அரவணைத்தும் அவர்களை மதித்தும், விட்டுக்கொடுத்தும் நட்பு ரீதியாகவும் நடந்து கொண்ட பாங்கு நமக்கெல்லாம் நல்ல படிப்பினை என்றால் அது மிகையாகாது.

மௌலவி
எம்.யூ.எம். வாலிஹ்...
(பாரி, அல் அஸ்ஹரி) வெலிகம



# மானுட நேயத்தின் மாண்பை வெளிப்படுத்தி வரும் எழுத்தாளர் அன்னலட்சுமி இராஜதுரை

இராமநாதன் கல்லூரி வழங்கிய வளமான அறிவுத்தேட்டத்துடன் இதழியல் துறைக்கு வந்து அறுபது ஆண்டுகளுக்கு மேலாக மானுட நேயத்தின் மாண்பை வெளிப்படுத்திவரும் வகையில் தனது எழுத்துப்பணியை மேற்கொண்டுவரும் அன்னலட்சுமி இராஜதுரை அவர்களின் எழுத்துப்பணிகள் நீடித்த பயன் அறிவு சார்ந்த அனுபவப் பதிவுகளாக உள்ளன என்று பேராசிரியர் சபா. ஜெயராசா கூறினார்.



## சிறுகதை நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சபா.ஜெயராசா புகழாரம்

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவை இணைந்து வெளியிட்ட 'அன்னலட்சுமி இராஜதுரை சிறுகதைகள்' வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெற்ற போது பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமை வகித்து உரையாற்றினார்.

அவர் தனதுரையில் தெரிவித்ததாவது:

"சிறந்த செய்தி அளிக்கையாளர், ஆலோசனையும் ஆற்றுப்படுத்தலும் வழங்கும் ஆசிரிய தலையங்க எழுத்தாளர், நிதானமாகக் கருத்துகளைப் பகிர்ந்தளிக்கும் இதழ்கீலம் என்ற பத்தி எழுத்தைப் படைப்பவர் என்ற பல நிலைகளிலே அவரது இதழியல் எழுத்துகள் அமைந்துள்ளன.

இதழியலிலே பணியாற்றுபவர்கள் மொழிபெயர்ப்புத்திறன் மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்பதைத் தமது ஆக்கங்கள் வாயிலாக அவர் நிரூபித்து வருகின்றார். ஆக்க இலக்கிய எழுத்துக்களில் ஈடுபட்டு வரும் அவர், ஆங்கிலக்கதைகளையும் கவிதைகளையும் தமிழுக்குக் கொண்டு வந்து வளமான மொழி அளிக்கைகளைத் தந்துள்ளார்.

அன்னலட்சுமி அவர்கள் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், உரைநடைச் சித்திரம், கட்டுரை, இலக்கியம், திறனாய்வு இலக்கியம் போன்ற பன்முகத் துறைகளிலே தடம் பதித்தவர். அவரது எழுத்துகள் சமூகநீதியும் சத்தியம் என்ற உண்மை அழுத்தமும் நிறைந்திருப்பவை. ஆழ்ந்த கருத்துக்களும் அழகான அழகான எடுத்துரைப்பும் எழுத்துகளுக்கு அழகு சேர்ப்பன.

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவற்றின் பணிகள் இலக்கிய நிலயில் மட்டுமின்றி சமூக நிலையிலும் முக்கியமானவை. அவற்றை மறைகரமாக நின்று இயக்கி வருபவர் வவுனியூர் இரா.உதயணன். புகழ்ச்சியையும் பாராட்டையும் விரும்பாதவர், வவுனியாவிற்கு இலக்கிய அடையாளம் கொடுப்பதில் முதல்நிலை அரங்கில் நின்று உழைத்து வருபவர்.

பல்கலைக்கழக மாணவர்கள், போரின் இடரினால் தாக்கப்பட்டோர், எழுத்தாளர்கள், கலைஞர்கள் என்ற பல துறையினரையும் அரவணைத்து அவர் மேற்கொள்ளும் உதவிகள் ஏராளம். தனது நெருங்கிய நண்பர்களுக்குக் கூட தான் செய்யும் உதவிகளை அவர் கூறுவதில்லை. அத்தகைய பெருந்தன்மைமிக்கவர்.

வெளியீட்டுத்துறையில் கால்பதித்து இதுவரை பல நூல்களை பதிப்பித்து கொடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அந்த வகையில் மூத்த பெண் எழுத்தாளர் அன்னலட்சுமி இராஜதுரையின் சிறுகதைகளையும் பதிப்பித்து வழங்கியுள்ளார். அடுத்த முயற்சியாகத் தமிழ் கலைச்சொல் தொகுதி ஒன்றை வெளியிடவுள்ளார். கலைச்சொல்வாக்கம் உலகளாவிய நிலையில் முக்கியத்துவம் பெற்று வரும் நிலையில் அந்தப் பணியை அவர் முன்னெடுத்திருப்பது பாராட்டுக்குரியது. அவரது பணிக்கு துணை நிற்கும் செயற்பாட்டாளர்கள் தம்புசிவா, கே.பொன்னுத்துரை, மேமன் கவி ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள்".

இவ்வாறு பேராசிரியர் சபா.ஜெயராசா தெரிவித்தார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

பிரமுகர்களின் மங்கல விளக்கேற்றலுடன், செல்வி பிரியன்கா ஆன் பரான்சிஸ் தமிழ் வாழ்த்து பாடி ஆரம்பித்து வைப்பார். இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவற்றின் இணைப்பாளர் த. சிவசுப்பிரமணியம்(தம்புசிவா) வரவேற்புரையையும், தொடக்கவுரையம் நிகழ்த்தினார்.

வாழ்த்துரைகளை ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் மருத்துவர் தி. ஞானசேகரன் மற்றும் கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை. எஸ். தில்லநடராஜா ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் ஊடக அதிதிகளாக தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பிரதமஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் இரா. சிவராஜா, வீரகேசரி நிறுவன பிரதம செய்தி முகாமையாளர் ஆர். பிரபாகன் மற்றும் ஊடகவியலாளர் திருமதி உமா சந்திரா பிரகாஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

நூல்விமர்சனத்தை எழுத்தாளரும், 'தகவம்' செயலாளருமான திருமதி வசந்தி தயாபரன் ஆற்றினார்.

முதற் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்ள சிறப்பு பிரதிகளை தொழில் அதிபர்களான் திருமதி சண்முகப்பிரியா கார்த்திக், ராஜ்பிரசாத் விஸ்வநாதன் (துரைவி), திருமதி கௌசல்யா கோவிந்தப்பிள்ளை ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

ஏற்புரையை நூலாசிரியர் திருமதி அன்னலட்சுமி இராஜதுரை அவர்கள் நிகழ்த்த, நன்றியுரையை இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகத்தின் ஊடக இணைப்பாளர் கலாபூஷணம் கே.பொன்னுத்துரை நிகழ்த்தினார்.

நிகழ்வுகளை மேமன்கவி தொகுத்து வழங்கினார்.



# மீலாதுன் நபி சிறப்பு மலர்

தயாரிப்பு: மர்லின் மரிக்கார்



# இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) மகத்தான உதாரண புருஷர்

மனித குலத்தின் மாணிக்கமாய் மண்ணில் வந்துதித்த எம் பூமான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் படைப்பினங்கள் அனைத்திற்கும் மிகச்சிறந்த முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். அஞ்ஞான காலத்தில் பிறந்த நபி அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பெற்ற அறிவு, ஞானத்துடன் பூரண பலமிக்க ஆளுமை குணங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தார்கள்.

நபிகளாரது வரலாற்றை ஆய்வு செய்த மேற்கத்திய அறிஞர் மார்ட்டின் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார், “மனித ஆளுமையை அளவிடக்கூடிய எல்லா அளவுகோல்களை விடவும் பிரமிக்கத்தக்க ஆளுமைகளை கொண்டவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆவர்”. *(Muhammad: His life Based on the Earliest sources)*

அல்லாஹுத்தஆலா அவனது திருமறையில் நபி (ஸல்) அவர்கள் குறித்து இவ்வாறு தெரிவித்திருக்கிறான்,

“நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கின்றது.” (33:21).

இத்திரு வசனத்தில் அல்லாஹுத்தஆலா அண்ணலாரிடம் அகிலத்தார்க்கான அழகிய முன்மாதிரி இருக்கின்றது என்பதாக கூறி, நபிகளாரின் அழகியல் ஆளுமையையும், நாகரீக மேம்பாட்டையும் எமக்கு அறிமுகம் செய்கின்றான். அண்ணல் நபி (ஸல்) அவர்களது பிறப்பு தொடக்கம் இவ்வுலகை விட்டுப் பிரியும் வரை அவரது ஒவ்வொரு செயற்பாடுகளிலும் ஓர் அழகியல் நேர்த்தியும் ஒழுங்கியல் செம்மையும் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம்.

நபி (ஸல்) அவர்களது சொல், செயல், இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள், பிற மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் என எல்லாவற்றிலும் ஓர் அழகிய முன்மாதிரியை கடைப்பிடித்தார்கள். அதனால்தான் அல்லாஹுத்தஆலா அவனது திருமறையிலே

'நபியே நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராய் இருக்கின்றீர் (68; 04)

என்பதாக கூறியுள்ளான்.

நபி (ஸல்) அவர்களது ஒட்டுமொத்த முன்மாதிரி பண்புகளும் இறுதிநாள் வரை மனித குலத்தின் வழிகாட்டியாக அருளப்பட்ட அல்குர்ஆனிய பண்பாக இருந்தது. அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம், நபி (ஸல்) அவர்களின் குணம் எப்படி இருந்தது என்று கேட்கப்பட்ட போது “நபிகளாரின் குணம் அல் குர்ஆனாக இருந்தது' என்று கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

புனித அல்குர்ஆன் அற்புதமானது, தெளிவானது, அழகானது, அறிவுபூர்வமானது, ஆதாரபூர்வமானது. இவ்வாறு நபி (ஸல்) அவர்களது வாழ்வும் முன்மாதிரியானது.

நபி (ஸல்) அவர்களது தனிப்பட்ட வாழ்விலும், சமூக வாழ்விலும், லௌஹீக மற்றும் ஆன்மீக செயற்பாடுகளிலும் மனித குலமே வியந்து நிற்கின்ற அளவுக்கு அழகிய முன்மாதிரிகள் காணப்பட்டன.

எப்பொழுதும் தனது சுயத்தை உண்மையாக வெளிப்படுத்தி வெளிப்படைத்தன்மையோடு வாழ்வதில் மிகப்பெரும் முன்மாதிரியாக எம் பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், “எந்த இறைத்தூதரும் ஆடு மேய்க்காமல் இருந்ததில்லை" என நபிகளார் கூற, அவர்களின் தோழர்கள் "அல்லாஹ்வின் தூதரே தாங்களுமா..." எனக்கேட்க அப்போது, நபி (ஸல்) அவர்கள், 'ஆம்! மக்கா வாசிகளிடம் சில கீராத் கூலிக்காக ஆடு மேய்ப்பவனாக இருந்தேன்'. (ஆதாரம் புஹாரி) எனக் கூறி, தான் கடந்து வந்த வாழ்க்கைப் பாதையின் உண்மை நிலையை ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்தார்கள்.

ஈருலக இரட்சகர், அகிலங்களின் தலைவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியான செயற்பாடுகள், இன்று பெரும்பாலான மனிதர்கள் அணிந்திருக்கின்ற விசித்திரமான முகமூடிகளைக் களைந்து, உண்மையான வாழ்வை வாழ்வதற்கான வழிமுறையை கற்றுக் கொடுக்கின்றது.

ஒரு மனிதன் தன்னையும் பிற மனிதர்களையும் ஏமாற்றிக் கொண்டு வாழ்கின்ற நயவஞ்சகத்தனமான வாழ்வை வெறுத்தார்கள். நயவஞ்சகத்தன்மை மனிதப் பண்புகளுக்கு முற்றிலும் முரணானது என்றும் நயவஞ்சகர்கள் ஒதுங்கும் தளம் நரகம் என்றும் எச்சரித்தார்கள்.

நபி (ஸல்) அவர்களது மனித குலத்துக்கான மிக அழகிய முன்மாதிரிகளில், பிறர் நலன் பேணுவதில் மிகவும் அக்கறையாக செயல்பட்டார்கள்.

இது பற்றி அல்லாஹுத்தஆலா,

“மூஃமின்களே... நிச்சயமாக உங்களில் இருந்து ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் துன்பத்திற்குள்ளாகிவிட்டால் அது அவருக்கு மிக வருத்தத்தை கொடுக்கின்றது. அன்றி, உங்கள் நன்மைகளையே அவர் பெரிதும் விரும்புகின்றார். இன்னும் மூஃமின்கள் மீது மிக்க கருணையையும் மிகுந்த கிருபையும் உடையவராக இருக்கின்றார்”. (09:128)

என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட அற்புதமான ஆளுமை பண்புகளே அன்னாரது அழகிய முன்மாதிரியின் அடையாளங்களாக விளங்குகின்றன. நபிகளார் ஒரு பொழுதும் பொய் பேசியதே இல்லை. தனக்காக கோபப்பட்டதும் இல்லை. சுயநலத்துக்காக எவரையும் பழிவாங்கியதும் இல்லை. கண் சாடையால் கூட எவரையும் நோகடித்ததும் இல்லை. உண்மை, நேர்மை, பணிவு, எளிமை, அழகு, அறிவு போன்ற உயரிய பண்புகளின் மகுடமாக அன்னார் திகழ்ந்தார்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக பெருமானார் (ஸல்) அவர்கள் ஆத்மீகத்தின் உச்ச நிலையில் இருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள், இறைவா... எனது கேள்வி, பார்வைப் புலன்கள், எனது மூளை, எலும்பு, நரம்பு நாளங்கள் எல்லாம் உனக்காக கட்டுப்படுகின்றன. என பிரார்த்தனை செய்தவராக நீண்ட நேரம் ருக்குவில் கழிப்பார்கள். தனது பாதங்கள் வீங்கும் அளவு நீண்ட நேரம் தொழுகையில் ஈடுபடுவார்கள். அன்னாரின் இந்நிலை கண்டு கவலையுற்ற அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் இப்படி கூறினார்கள், “நான் இறைவனுக்கு நன்றி உள்ள அடியானாக இருக்க வேண்டாமா?” (ஆதாரம்: புஹாரி)

ஒரு மனிதனது ஆன்ம சாந்திக்கான அச்சாணியாக கருதப்படுகின்ற ஆன்மீக செயற்பாடுகளில் மிகச் சிறந்த முன்மாதிரியாக கருதப்பட்டார்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

எனவே ஒரு முஸ்லிம் இவ்வுலக வாழ்வில் பின்பற்றத்தகு மிகச்சிறந்த முன்மாதிரியாக நபிகளாரையன்றி வேறு எவரையும் பெற்றுக்கொள்ள முடியாது. தனது வாழ்வின் எல்லாக் கால சூழலுக்கும், சந்தர்ப்பங்களுக்குமுரிய வழிகாட்டல்களையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது அழகிய முன்மாதிரிகளிலிருந்து மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்பது ஒரு நிராகரிக்க முடியாத உண்மையாகும்.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம்.சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons,(Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

## உழைப்பின் மகிமை பற்றி உத்தம நபிகள்!

அன்றொரு நாள் நபி நாதர் தோழருடன்
அமர்ந்திருந்த வேளை யாங்கே
குன்றெனவே புயமுயர்ந்த ஜாம்பவான்
ஒருவர் வந்து தர்மம் கேட்டார்

நன்றலவே இவர் நல்ல பலமுடைய
உடலிருந்தும் இரந்து வாழ்தல்
என்று மனச் சஞ்சலமாய் மாநபிகள்
இழிதொழிலை வெறுத்தவாறு

சோதரரே! உங்களிடம் பணமுண்டா
என்ன நபி வினவக் கேட்டு
நீத முடை நபி முன்னே வந்த வரும்
ஐந்து திர்ஹம் எடுத்து வைத்தார்




தோழரிடம் அப்பணத்தைக் கொடுத்து நபி
சொன்னார்கள் கடைக்குச் சென்று
கோடரியும் கயிறுகளும் வாங்கி வந்து
கொடுங்கள் இவர் தொழில் நாட

கோடரியின் கணைதன்னை மாநபிதம்
பொற்கரத்தால் சீவி மாட்டிக்
காடு சென்று விறகு வெட்டிச்
சீவியுங்கள் சோதரரே என்று சொன்னார்

அண்ணல் நபி சொற்படியே விறகு வெட்டி
விற்று வந்த அவரோ பின்னர்
கண்ணியமும் கௌரவமும் பெற்றுயர்ந்த
பெருவாழ்வு கண்டார் அன்றே..

சுஜப் எம். காசிம்...

## அகமது நபி அகநதி



அருளின் அகச் செம்மலார் பெருமானார்
இருளின் வாழ்வுக்கொரு
அக விளக்கொளியானார்
ஈமானியச் சொற்களின் பொருளை
இதயத்தால் வாழ்ந்தார்

கலிமா அக நாவின் தேனூற்று
தொழுகை அவர் தேர்ந்த சுவனப்பாதை
அஸ்ஸலாம் அகிலத்து மனிதர்களின்
அக அழுக்ககற்றும் வழி
ஸக்காத் ஏழைப் பசிக்குழியை நிரப்பும்
தர்மத்தின் நிதி
க.ஃபத்துல்லாஹ்வின் தரிசனம்
மனசுக்குள் ஆயிரம் ஸம்ஸம் ஊற்று

ஆன்மீகத்தால் வாழ்ந்து காட்டிய திசைகாட்டி
அருளின் அகச்செம்மலார்

எளிமை உருவின் இனிமை
பொறுமைப் பண்பின் வடிவம்
உண்மைத் தனத்தின் அடையாளம்
நம்பிக்கைக் குணத்தின் குறியீடு

அண்ணலார் வாழ்வொரு முன்மாதிரி
அனைத்து மாந்தருக்குமொரு நல்வழி

முஹம்மது நபிகளார் மொழியெனும் பன்னீரால்
கல்புகளைக் கழுவுவோம்

எல்லைகள் கடந்தோடும்
கருணை நபியின்
அகநதி ஈரம் பட்டு
நிலமெல்லாம் செழிக்கட்டும்

பண்பாட்டின் பேரொளியால்
பாருலகு வெளுக்கட்டும்

முல்லை முஸ்ரிபா...

## ஆசிரியப் பணிக்கு நபிகளாரின் வழிகாட்டல்கள்

முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்து வளர்ந்த சமூகம் படிப்பறிவில்லா சமூகம். வரலாற்றில் அது ஜாஹிலிய்ய சமூகம் என குறிப்பிடப்படுகிறது. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூட, 'நாம் படிப்பறிவில்லா ஒரு சமூகம். எமக்கு எழுதவோ கணிப்பிடவோ தெரியாது' (ஆதாரம்: புஹாரி) என்று கூறியுள்ளார்கள்.

எழுதப்படிக்கத் தெரியாத அந்த சமூகத்தின் ஒருவராக நபியவர்களும் எழுதப்படிக்கத் தெரியாதவராகவே இருந்தார்கள். அப்படியொரு சமூகத்தில் தான் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராக நபியவர்கள் அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டார்கள். அல்லாஹ் என்னைக் கடினபோக்குக் கொண்டவராகவோ கஷ்டப்படுத்துபவராகவோ அனுப்பவில்லை. மாறாக என்னை ஆசிரியராகவும் இலகுபடுத்திக் கொடுப்பவராகவுமே அனுப்பினான் (ஆதாரம்: முஸ்லிம்) என்று கூறி நபியவர்கள் தம்மை ஆசிரியராகப் பிரகடனப்படுத்தினார்கள்.



நபியவர்களுடைய பாசறையில் அலி (ரழி) போன்ற சிறுவர்களும் அபூபக்கர் (ரழி) போன்ற பெரியவர்களும் கதீஜா (ரழி) போன்ற மூதாட்டிகளும் ஆயிஷா (ரழி) போன்ற சிறுமிகளும் அபுதர் (ரழி) போன்ற ஏழைகளும் உஸ்மான் (ரழி) போன்ற செல்வந்தர்களும் பிலால் (ரழி) போன்ற அடிமைகளும் ஏக காலத்தில் கல்வி கற்றார்கள். அவர்கள் எல்லோரையும் ஒரே மாதிரியாகக் கவனிக்கும் வகையில் அனைவரும் நபிகளாரின் தோழர்கள் (ஸஹாபாக்கள்) என்றே அழைக்கப்பட்டார்கள். இது மாணவர்களிடையே பொதுத்தன்மை ஒன்றைப் பேண உதவியது. ஆசிரியர் மாணவர்களைத் தோழனாகக் கருதும் போது அவர்கள் தெரியாதவற்றையும், கேட்பதற்கு வெட்கப்படும் விடயங்களையும் கற்றுத் தெளிந்து கொள்ள வழி கிடைக்கிறது.

ஒரு முறை ”மதீ” பற்றித் தெரிந்து கொள்ள விரும்பிய அலி (ரழி) அவர்கள் தமது மாமன் முறையான நபி (ஸல்) அவர்களிடம் கேட்க வெட்கப்பட்டு மற்றொரு ஸஹாபி மூலம் நபிகளாரை அணுகித் தெளிவுபெற்றுக் கொண்டார்கள். (ஆதாரம்: புஹாரி). இதேபோன்று பெண்களும் நபிகளாரிடம் வெட்கத்தை விட்டு பல விடயங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது தொடர்பில் அன்னை ஆயிஷா (ரழி) குறிப்பிடும் போது,அன்ஸாரிப்பெண்கள்மிகச்சிறந்தபெண்கள்.அவர்களது வெட்கம் மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதில் இருந்து அவர்களைத் தடுக்கவில்லை எனப் பாராட்டியுள்ளார்கள்.

இவ்வாறு தன்னிடம் கற்றுக்கொள்ள வருகின்ற மாணவன் தனது அனைத்துக் கேள்விகளையும் கேட்டுத் தெளிவுபெறக் கூடிய விதத்தில் ஆசிரியர் தோழமையுடன் பழகுவது ஆசிரியப்பணியின் வெற்றியாக அமைகிறது.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் இருவழித் தொடர்பாடல் முக்கியமாகும். இரு சாராரும் இதில் சமபங்கு ஏற்கும் பொழுது தான் கற்றல் கற்பித்தல் செயற்பாடு வெற்றியளிக்கிறது. கற்பித்தலை ஆரம்பிக்க முன்னர் கற்றலின் முக்கியத்துவத்தையும் அதற்கான வழிகாட்டலையும் வழங்குவது நபியவர்களின் முன்மாதிரியாக இருந்திருக்கிறது. அறிவைத் தேடிப் பெற்றுக்கொள்வது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும் (ஆதாரம்: இப்னுமாஜா) என்றும், அறிவு என்பது முஃமினிடமிருந்து தொலைந்து போன சொத்து, அதனை எங்கு கண்டாலும் பெற்றுக் கொள்வதற்கு அவன் அருகதையுடையவனாவான் (ஆதாரம்: திர்மிதி) என்றும் குர்ஆனைக் கற்று அதனைப் பிறருக்கும் கற்றுக் கொடுப்பதே உயர்ந்த தர்மம் (ஆதாரம்: இப்னு மாஜா) என்றும் கல்வியின் முக்கியத்துவத்தையும் ஆசிரியருக்குரிய மதிப்பையும் மாணவர்களிடம் நபியவர்கள் பதிய வைத்திருக்கிறார்கள்.

கல்வியின் பெறுமதி ஊட்டப்பட்டு கல்வியைக் கற்ற மாணவர்கள் அவர்களும் கல்வியைப் போதிப்பவர்களாக மாறுவதும் கல்வியின் சிறப்பை மக்களுக்கு முன்வைப்பவர்களாக மாறுவதும் இவ்வாறான கற்பித்தல் முறையின் சிறந்த விளைவுகளாகும். இந்த வகையில், மக்களே...., அறிவைத் தேடும்படி உங்களை உபதேசிக்கிறேன். யார் அதிலிருந்து ஒரு பகுதியைக் கற்றுக்கொள்கிறாரோ அவர் அல்லாஹ்வின் அன்பு எனும் போர்வையினால் போர்த்தப்படுகிறார் என நபியவர்களிடம் கற்ற உமர் (ரழி) கூறியிருக்கிறார்கள்.

அறிவைத் தேடிக் கற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்காகவென அதனைக் கற்கும் போது அது இபாதத்தாகிறது. அதனை மீட்டுவது தஸ்பீஹாகிறது. அறிவைத் தேடிச் செல்வது ஜிஹாத் ஆகிறது என முஆத் இப்னு துபல் (ரழி) அவர்களும், காலையிலும் மாலையிலும் அறிவு தேடச் செல்வதை யார் ஜிஹாதாகக் கருதவில்லையோ அவருடைய அறிவிலும் கருத்திலும் குறைபாடுள்ளது என அபுதர் (ரழி) அவர்களும் சொல்வதற்கு அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் கல்வியின் முக்கியத்துவத்தையும் அதனை இறைவணக்கமாகவும் உணர்த்திப் பதிய வைத்தமை காரணமாகும்.

தமது தோழர்களின் ஆற்றல்களை இனங்கண்டு அவர்களை அந்தத் துறையில் வழிப்படுத்துவது நபிகளாரின் கற்பித்தலில் காணப்படும் சிறந்த முன்மாதிரியாகும். நால்வரிடமிருந்து அல்குர்ஆனைக் கற்றுக் கொள்ளுங்கள். இப்னு மஸ்ஊத், முஆத் இப்னு ஜபல், உபை இப்னு கஅப், அபுஹுதைபாவின் அடிமை ஸாலிம் (ரழி) (ஆதாரம்: புஹாரி) என அல்குர்ஆனைக் கற்பிப்பதற்கான நபர்களை இனம்காட்டினார்கள். எமது சமூகத்தில் சமூகத்தோடு இரக்கம் கொண்டவர் அபுபக்கர் (ரழி), மார்க்கத்தில் கடுமையாக இருப்பவர் உமர் (ரழி), தீர்ப்பு வழங்குவதில் மிகச் சிறந்தவர் அலி (ரழி), வாரிசுரிமைச் சட்டம் பற்றிய அறிவில் மிகைத்தவர் ஸைத் இப்னு ஸாபித் (ரழி), ஹலால் ஹராம் பற்றி மிக அறிவுள்ளவர் முஆத் இப்னு ஜபல் (ரழி) என ஒவ்வொருவரும் எந்தத் துறையில் சிறப்பானவர்கள் என்பதை நபியவர்கள் இனம்கண்டு வைத்திருந்தார்கள். நபிகளாருடைய கற்பித்தல் குறிப்பிட்ட நேரத்தை வரையறுத்ததாக இருக்கவில்லை. எப்போதும் தமது தோழர்களுடன் சுற்றிச் சுழல்வதாகவே அவருடைய ஆசிரியர் உறவு இருந்தது. இதனால் தமது தோழர்களின் இயல்புகளை அறிந்து வழிகாட்டுவதற்கு நபிகளால் முடியுமாக இருந்தது. இந்த வகையில் தான் ஒரு சிரேஷ்ட ஸஹாபியாக இருந்தும் கூட, அவர் பதவி கேட்டும் கூட அவர் மிருதுவானவர் என்பதால் அபுதர் (ரழி) அவர்களுக்கு எந்த நிர்வாகப் பொறுப்பையும் நபியவர்கள் கொடுக்கவில்லை.

கற்பித்தலின் போது தமது தோழர்களிடம் நபியவர்கள் நடந்து கொண்ட விதமும் முன்மாதிரி மிக்கதாகும். தமது தோழர்கள் அறிவிலும் செயற்பாடுகளிலும் சிலவேளை பண்பாடுகளிலும் குறைந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தம்மிடம் கற்க வந்தவர்களிடம் நளினமாக நடந்து கொண்டார்கள். அவர்களை இன்முகத்தோடு வரவேற்பார்கள். அறிவு தேட வருபவர்களே..., உங்கள் வரவு நல்வரவாகட்டும் எனக் கூறி மாணவர்களை வரவேற்கும் நபியவர்கள், அறிவு தேடுபவர்களை மலக்குகள் தமது இறக்கைகளால் சூழ்ந்து கொள்கிறார்கள். பின்னர் அவர்கள் அறிவு தேடுபவர்களில் கொண்ட அன்பின் காரணமாக ஒருவர் மேல் ஒருவராக பூமிக்கு அண்மையிலுள்ள வானத்தை எட்டி விடுகிறார்கள் (ஆதாரம்: அஹ்மத்) என்று சுபசோபனம் கூறி கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவார்கள்.

நபியவர்கள் தமது கற்பித்தலின் போது தோழர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதனை முஆவியா பின் ஹகம் அஸ்ஸுலமி (ரழி) அவர்கள் இப்படிக் கூறுகிறார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டும். அவர்களைப் போன்று சிறந்த முறையில் கற்பிக்கும் ஆசிரியரை நான் இதற்கு முன்போ பின்போ கண்டதில்லை. தொழுகையில் நின்றபோது தெரியாத்தனமாக நான் தும்மிய ஒருவருக்குப் பதில் சொன்னபோது கடுமையான வார்த்தைகளால் நபியவர்கள் என்னை ஏசவுமில்லை. அடிக்கவுமில்லை. தொழுகையை நிறைவேற்றி முடிந்ததும் “இந்தத் தொழுகையில் சாதாரண நிலையில் தொழுவது போல பேசக் கூடாது என அறிவுரை பகர்ந்தார்கள்.

ஆகவே கற்பித்தலில் சிறந்த முன்னோடியாக நபிகளாரைப் பின்பற்றி சிறந்த ஆசிரியர்களாக மாறுவோம்.

பியாஸ் முஹம்மத்...



# மீலாதுன் நபி சிறப்பு மலர்



தயாரிப்பு: மர்லின் மரிக்கார்



## மனிதநேயத்தின் முழு வடிவம்

முஹம்மத் (ஸல்) அவர்கள் மிக உயர்ந்த அந்தஸ்த்திலுள்ள இறைத்தூதர் ஆவர். அவர் மனிதர்களோடு மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டதோடு மனிதர்களின் தேவைகளை கருத்திலெடுத்தார். மனிதரை மனிதராக நோக்கினார். மனிதாபிமானத்தில் அன்னார் உதாரண புருஷராகத் திகழ்ந்தார்கள். நுபுவ்வத்துக்கு முன்னரும் பின்னரும் எதிரியுடனும் நண்பனுடனும் அனைத்து மக்களுடனும் மனிதாபிமானமாக நடந்துகொண்டார்கள். அவர் கொண்டு வந்த இறைத்தூது மனிதர்களுக்கானது.

நபியவர்களுக்கு வஹி அருளப்பட்ட போது கதீஜா (ரழி) அவர்கள் கூறிய வார்த்தைகள், நபியின் மனிதாபிமானத்தைப் பறைசாற்றுகின்றது. 'அல்லாஹ் மீது சத்தியமாக.... அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவுபடுத்தவே மாட்டான். நீங்கள் உறவுகளைப் பேணிக்கொள்கிறீர்கள். ஏழைகள், பலவீனர்கள், அநாதைகள் போன்றோருக்கு உதவி செய்து அவர்களது சுமையைச் சுமக்கிறீர்கள். இல்லாதவர்களுக்கு உதவி செய்கிறீர்கள். விருந்தாளிகளை கௌரவப்படுத்துகிறீர்கள். பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றை நீக்கப் பாடுபடுகின்றீர்கள்'. (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இவை நபி (ஸல்) அவர்களின் உயர்ந்த மானுடப் பண்பை தெளிவாக எடுத்தியம்புகிறது. அன்னார் தனது தோழர்கள், மனைவியர், சிறுவர்கள், எதிரிகள், விலங்குகள், தாவரங்கள், சடப்பொருட்களுடன் கூட மனிதாபிமான அடிப்படையில் மிகவும் மென்மையாகவும் உணர்வுபூர்வமாகவும் நடந்துகொண்டார்கள். அன்னார் தமது மனைவியருடன் அன்பாக நடந்துகொண்டதோடு அவர்களுடன் நெருக்கமாகப் பழகினார்கள். குடும்ப உறவை கட்டியெழுப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்தார்கள். அவர் கடுமையாக நடந்துகொள்ளவில்லை. மென்திறன்களையே பயன்படுத்தினார்கள். மனைவியரின் உணர்வுகளை மதித்தார்கள். அவர்களது விருப்பு வெறுப்புக்களைக்கூட புரிந்து வைத்திருந்தார்கள்

'நீங்கள் என்மீது அன்பாக இருக்கிறீர்களா அல்லது கோபமாக இருக்கிறீர்களா என்பதனை நான் அறிந்து வைத்துள்ளேன். நீங்கள் என்மீது திருப்தியாக இருந்தால் 'முஹம்மதின் இரட்சகன் மீது சத்தியமாக' என்று கூறுவீர்கள். என்னோடு கோபத்தோடு இருந்தால் 'இப்றாஹீமின் இரட்சகன் மீது சத்தியமாக' என்று கூறுவீர்கள் என்றார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் தனது மனைவியான ஆயிஷா (ரழி) அவர்களுடன், நடப்பதில் போட்டி போட்டு தோல்வியடைந்துள்ளார்கள். இரண்டாவது முறை நடைபோட்டியில் வெற்றியடைந்தார்கள். அன்றடைந்த தோல்விக்காகத்தான் இவ்வெற்றி என்று கூறி சிரித்தார்கள்.

(ஆதாரம்: அஹ்மத், நஸாஇ, அபூ தாவூத்)

அதேநேரம் தமது தோழர்களுடனும் நபி (ஸல்) மனிதத்தன்மையோடு நடந்துகொண்டார்கள். அவர்களை நேசித்ததோடு அவர்களுக்கு முகமன் (ஸலாம்) கூறுவதில் முந்திக்கொண்டார்கள். அவர்களுக்கு மிக விருப்பமான பெயரை வைத்து அவர்களை பேசுவார்கள். உதவிகள் புரிவார்கள். அவர்களது நிம்மதிக்காக தன்னை வருத்திக்கொள்வார்கள்.

ஒரு பிரயாணத்தின்போது நபியின் தோழர்கள் நீரை இழந்து விட்டார்கள். அழிந்துவிட வேண்டியதுதான் என்று அங்கலாய்த்தார்கள். அப்போது நபிகளார் 'நீங்கள் அழிந்துபோக நான் விடமாட்டேன்' என்று கூறியவாரே 'உங்களது சிறிய பாத்திரங்களை கொண்டு வாருங்கள்' என்றார்கள். பின்னர் நீர் இருந்த பாத்திரத்தை கொண்டுவந்து நீரை பங்கீடு செய்ய ஆரம்பித்தார்கள். நீர் முடியும் தருவாயில் இருந்தது. அபூ கதாதா (ரழி) நீரை அருந்தாது பார்த்துக்கொண்டிருந்தார். 'நீரை அருந்துங்கள்' என்று அவரிடம் கூறப்பட்டபோது, நீங்கள் அருந்தும்வரை நான் அருந்தப்போவதில்லை என்றார்கள். அப்போது நபியவர்கள் 'சமூகத்துக்கு நீரை பகிர்ந்தளிப்பவர் இறுதியாகவே அதனை அருந்துவார்' என்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி, இப்னு மாஜா)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்களோடு மக்களாக இணைந்திருந்தார்கள். அவர்களது தேவைகளைப் புரிந்துகொண்டார்கள். மாமன்னர்கள் போன்று சுகன்டியாக படாடோபத்தோடு இருக்கவில்லை. ஒரு தடவை ஒரு மனிதர் நபியவர்களை சந்திக்க வந்தபோது பேசுவதற்கு பயந்து நடுங்கிவிட்டார். இதனைப்பார்த்த நபியவர்கள் 'சாதாரணமாக இருந்துகொள்ளுங்கள். நான் ஒரு அரசனல்லன். காய்ந்த இறைச்சித் துண்டங்களை சாப்பிட்ட ஒரு பெண்ணின் மகன்தான் நான்' என்று கூறி தனது எளிமையை வெளிப்படுத்தினார்கள். (ஆதாரம்: இப்னு மாஜா, ஹாகிம்)

நபியவர்கள் சிறுவர்களுடனும் மனிதத்தன்மையுடன் நடந்து–கொண்டார்கள். சிறுவர்களுக்கு அன்பு காட்டுவார்கள். அவர்களோடு விளையாடுவார்கள். அவர்களது விளையாட்டுக் கடைகளை தரி–சிப்பார்கள். பொருட்களை கொள்–வனவு செய்வார்கள். அவர்களது உள நிலைகளை கருத்திலெடுத்து அவர்களுடன் இறங்கிப்போவார்கள்.

நபியவர்கள் தனது தோழர்களை சிரிக்க வைத்தார்கள். அவர்களின் நிலைமைகளைக் கேட்டறிந்துகொள்வார்கள். அவர்கள் எப்படியுள்ளார்கள் என்று அவர்களை சென்று தரிசிப்பார்கள். நோயாளிகளிடம் சுகம் விசாரிப்பார்கள். ஒருவர் மரணித்தால் அதில் கலந்துகொள்வார்கள். தனது தோழர்களின் நோய் நிலையைப் பார்த்து கவலைகொண்டு அழுதுள்ளார்கள்.

ஸஃத் இப்னு உப்பாதா (ரழி) அவர்கள் கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டிருந்த போது அவரை பார்ப்பதற்காக நபியவர்களும் அவருடன் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரழி), ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (ரழி), அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) போன்ற ஸஹாபாக்களும் வருகை தந்தார்கள். அச்சமயம் அவர் மயக்கமுற்று காணப்பட்டார். அவர் மரணித்து விட்டாரா என்று கேட்கப்பட்டபோது இல்லை என்று சொல்லப்பட்டது. இந்நிலையை பார்த்த நபியவர்கள் அழுது விட்டார்கள். அவருடன் சேர்ந்து தோழர்களும் அழுதார்கள்.....

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

நபியவர்கள் சிறுவர்களுடனும் மனிதத்தன்மையுடன் நடந்துகொண்டார்கள். சிறுவர்களுக்கு அன்பு காட்டுவார்கள். அவர்களோடு விளையாடுவார்கள். அவர்களது விளையாட்டுக் கடைகளை தரிசிப்பார்கள். பொருட்களை கொள்வனவு செய்வார்கள். அவர்களது உள நிலைகளை கருத்திலெடுத்து அவர்களுடன் இறங்கிப்போவார்கள். அவர் தொழும் நிலையில் பேரர்களின் விளையாட்டுகளுக்காக விட்டுக்கொடுப்பார்கள். பாட்டனின் முதுகில் பேரர்கள் சவாரி செய்வார்கள். அவர்களை அரவணைத்துக் கொள்வார்கள். முத்தமிடுவார்கள். அவர்களது சந்தோஷங்களுக்கு இடைஞ்சலாக நடந்துகொள்ள மாட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இஷா தொழுகைக்கு வரும்போது ஹஸன் அல்லது ஹுஸைன் (ரழி) அவர்களை அழைத்து வந்தார்கள். தொழுகையின் இடைநடுவில் வழமைக்கு மாறாக நீண்ட நேரம் ஸுஜூத் செய்தார்கள். இதுபற்றி தொழுகை முடிந்தபோது வினவப்பட்டது. அதற்கவர்கள் 'எனது மகன் முதுகில் ஏறிக்கொண்டுவிட்டார். அவரது தேவை நிறைவேறுவதற்கு முன்னராக நான் அவசரமாக எழும்ப விரும்பவில்லை' என்றார்கள். (ஆதாரம்: அஹ்மத், நஸாஇ, பைஹகி)

தவறிழைத்தவர்களைத் திருத்தி விடுவதிலும் நபியவர்கள் மனிதாபிமானத்துடன் நடந்துகொண்டார்கள். ஒரு நாட்டுப்புற அரபி பள்ளிவாசலில் சிறுநீர் கழித்துவிட்டார். தோழர்கள் அவரை தண்டிக்க முற்பட்டபோது 'அவரை விட்டுவிடுங்கள். அதன் மேல் கொஞ்சம் நீரை ஊற்றிவிடுங்கள். நீங்கள் இலகுபடுத்துபவர்களாகவே அனுப்பப்பட்டுள்ளீர்கள். கஷ்டப்படுத்துபவர்களாக அனுப்பப்படவில்லை' என்றார்கள்.

(ஆதாரம் : புஹாரி)

தொழுகை நடைபெற்றுக்கொண்டு இருக்கும்போது ஒருவர் தும்மி விடுகின்றார். இதனைக்கேட்ட நான் 'யர்ஹமுகல்லாஹ்' என்று சொல்லிவிட்டேன். எல்லோரும் என்னை முறைத்துப் பார்த்தார்கள். 'ஏன் எல்லோரும் என்னை பார்க்கிறீர்கள்' என்று நான் கேட்டுவிட்டேன். அவர்கள் தமது கைகளை கால்களில் அடிக்க தொடங்கி விட்டார்கள். தொழுகை முடிவடைந்தபோது சத்தியமாகச் சொல்கிறேன். எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டும். நான் நபியவர்களுக்கு முன்னரோ அவருக்குப் பின்னரோ அவரைப் போன்ற அழகாகக் கற்பிக்கின்ற ஆசிரியரொருவரைக் காணவில்லை. அல்லாஹ் மீது சத்தியமாக... அவர் கண்டிக்கவுமில்லை, அடிக்கவுமில்லை, ஏசவுமில்லை. மாற்றமாக அவர் என்னிடம் 'தொழுகையிலே கதைக்கக்கூடாது. இங்கு ஸுப்ஹானல்லாஹ், அல்லாஹு அக்பர், அல்குர்ஆன் ஓதுதல் போன்ற விடயங்களை மாத்திரமே செய்ய வேண்டும்' என்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் ருகூவில் இருந்தபோது பள்ளிவாசலில் நுழைந்தேன். குறித்த அணியில் வந்து இணைந்துகொள்ள முன்பதாகவே ருகூஃ செய்துவிட்டேன். பின்னர் மெதுவாக நடந்துவந்து அணியுடன் இணைந்து கொண்டேன். தொழுகை முடிந்த பின்னர் என்னிடம் வந்த நபியவர்கள் 'அல்லாஹ் உங்களது ஆர்வத்தை அதிகரிக்கட்டும். இதுபோன்று மீண்டும் செய்ய வேண்டாம்' என்றார்கள்.

(ஆதாரம்: புஹாரி, அபூ தாவூத்)

நபி ஸல் அவர்கள் ஒரு மனிதாபிமான தூதர் என்பதற்கு சான்றாக அவரது வாழ்வில் நிறையச் சம்பவங்கள் உள்ளன. அவற்றில் ஒருசிலவே இங்கு எடுத்தியம்பப்பட்டுள்ளன. அன்னாரின் மனிதாபிமான பண்புகளில் நாமும் படிப்பினை பெறுவோம்.

அஷ் ஷெய்க் யூ.கே. றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

## பொறுமையின் சிகரம்



ஒளியிலாத உலகினிலே இறை வேதத்தால்
இருளினை அகற்றி குர்ஆனைத் தந்து
கறை படிந்த உள்ளத்தை பரிசுத்தமாக்கி
மனிதம் இலங்கிடச் செய்திடுமோர் மா மனிதர்
ஈருலக வாழ்க்கை தத்துவம் தந்த
நபிநாதர் தொழுகைதனில் இன்பம் தந்தார்
இறையோனின் கடமைதனில் நோன்பினைந்தந்து
ஏழையின் வாழ்வுதனில் அன்புத் தலைவரானார்.

அன்பான மஹம்மது நபி களார்
குடும்பம் தாய், தந்தையர், பிள்ளைகள்
யாவரும் நடந்திடும் பாதைகள் வெட்டி
இன்பப் பயணம் செல்ல நற்றவம்
செய்தவர் பாசமலர்களைத் தூவி
முஸ்லிம் சமூகத்தின் மறுமை நாள்
பூலோக நல்வாழ்வுக்காய் மனமுருகி
மன்றாடச் செய்திடுமோர் இதய கமலம்.

சமாதானக் காற்றை விரும்பி சுவைத்த
தரணியிலே தீன் கொடியேற்றி
உலக மெலாம் பறக்க விட்ட நாதர்
பொறுமையாளன் எனும் சொல்லுக்காய்
மகுடம் சூட்டி இலக்கணம் வகுத்தார்
ஹுதைபிய்யா உடன்படிக்கையின் வித்து
எண்ணிலா சோதனைகளுக்கே பொறுமை ஒன்றே
ஈடில்லா வெற்றியால் தடம் பதித்தவறன்றோ!

இக்பால் அலி...

## நற்குணங்களின் தாயகம்

குடும்பத் தலைவராகவும், போதகராகவும், போர்ப்படைத் தளபதியாகவும், அப்பழுக்கற்ற ஆட்சியாளராகவும், இறைவனின் இறுதித் தூதராகவும் விளங்கிய முஹம்மத் (ஸல்) அவர்கள், வாழ்வின் எல்லாத் துறைகளிலும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள். நபி (ஸல்) அவர்கள் மக்கள் மீது அன்பும் பாசமும் கருணையும் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களுடன் மிக அழகிய முறையில் ஒழுக்கத்துடன் நடந்து கொண்டார்கள். மக்களில் மிக உன்னதமான குணத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள். அவர்களிடம் எந்தக் கெட்ட குணமும் இருந்ததில்லை. அவர்கள் இயற்கையாகவோ செயற்கையாகவோ கெட்ட வார்த்தை பேசுபவராகவோ இருந்ததில்லை. “உங்களில் சிறந்தவர் உங்களில் நற்குணமுடையவரே” என்று அவர்கள் கூறுவார்கள். குழந்தைகள் முதல் அனைவருக்கும் அவர்களே முதலில் ஸலாம் கூறுவார்கள். பெரியவர்களுக்கு கண்ணியமும், சிறுவர்களுக்கு இரக்கமும் காட்டுவார்கள்.

தேவையுடையோருக்கு உதவி செய்வார்கள். புதியவர்களுடன் நட்புடன் நடந்து கொள்வார்கள். தனது பணியாளரை ‘சீ’ என்ற சொல்லால்கூட சுட்டியதில்லை. ஒரு செயலைச் செய்ததற்காகவோ செய்யாமல் போனதற்காகவோ யாரையும் கண்டித்ததும் இல்லை. கடிந்து கொண்டதும் இல்லை. நபி(ஸல்) அவர்கள் தெள்ளத்தெளிவாக இலக்கிய நயத்துடன் பேசுபவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒரு விஷயத்தைப் பேசுகிறார்கள் என்றால், அதை (வார்த்தை வார்த்தையாக, எழுத்து எழுத்தாக கணக்கிட்டு) எண்ணக்கூடியவர் எண்ணியிருந்தால், ஒன்று விடாமல் எண்ணியிருக்கலாம். அந்த அளவுக்கு நிறுத்தி நிதானமாக பேசி வந்தார்கள். இதனால் மக்களில் மிக உயர்ந்த அந்தஸ்தில் இருந்தார்கள்.

இரண்டு விஷயங்களில் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி அவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டால் அதில் நபிகளார் மிக எளிதானவற்றையே எடுத்துக் கொள்வார்கள். ஆனால் அது பாவமாக இருக்கக் கூடாது. அது பாவமானதாக இருந்தால் அதை விட்டு வெகுதூரம் சென்று விடுவார்கள். நபிகளார் கணக்கிட முடியாத அளவுக்கு தான, தர்மங்களை வழங்கி வந்தார்கள். வறுமைக்கு அஞ்சாமல், ஏழை எளியோருக்கும் தேவையுடையோருக்கும் செலவு செய்தார்கள். அவர்கள் மக்களில் மிகக் கொடைத்தன்மை உடையவர்களாக இருந்தார்கள்.



நபிகளாரிடம் ஏதாவது ஒன்று கேட்கப்பட்டு, அவர்கள் அதை ‘இல்லை’ என்று சொன்னதில்லை. தன்னைப் பின்பற்றியவர்களை ‘தொண்டர்கள்’, ‘சீடர்கள்’ என்ற அடைமொழிகளால் அழைக்காமல், ‘தோழர்கள்’ என்று வாஞ்சையோடு அழைத்தார்கள். அந்தத் தோழர்களுடன் அளப்பரிய நேசத்துடன் பழகுவார்கள்.

அவர்களில் யாராவது மரணித்து விட்டால், அவர்களது ‘ஜனாஸா’க்களில் (இறுதி நிகழ்ச்சிகளில்) தவறாது பங்கேற்பார்கள். ஏழையை அவர்களது இல்லாமை காரணமாக இளக்காரமாகப் பார்க்க மாட்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாக்குறுதி கொடுத்தால் அதை மீற மாட்டார்கள். அவர்கள் எந்த உணவையும் ஒரு போதும் குறை கூறியதில்லை. அவர்கள் அதை விரும்பினால் உண்பார்கள். இல்லையென்றால் விட்டு விடுவார்கள். கல்வி, கண்ணியம், பொறுமை, சகிப்புத் தன்மை, வெட்கம், நம்பிக்கை அனைத்தும் நிறைந்ததாக நபிகளாரின் சபை இருந்தது. அங்கு உரத்த குரல்கள் ஒலிக்காது. கண்ணியத்திற்குப் பங்கம் வராது.

நபி(ஸல்) அவர்கள் நன்மையானவற்றைத் தவிர வேறெதையும் பேச மாட்டார்கள். அவர்கள் பேசினால் சபையோர் அமைதி காப்பார்கள். நபிகளார் அமைதியானால் தோழர்கள் பேசுவார்கள். அப்போது தோழர்கள் பேசுவதற்குப் போட்டி போட மாட்டார்கள். யாராவது பேசத் தொடங்கினால் அவர் முடிக்கும் வரை அவருக்காக அமைதி காப்பார்கள். சபைகளில் கண்ணியத்திற்குரியவர்களாகக் காட்சியளிப்பார்கள். தங்களது உடல் உறுப்புகளில் எதையும் வெளிக்காட்ட மாட்டார்கள். தேவையற்றதைப் பேச மாட்டார்கள். அதிகமதிகம் மௌனம் காப்பார்கள். அவர்களின் பேச்சு தெளிவானதாக இருக்கும். தேவையை விட அதிகமாகவோ குறைவானதாகவோ இருக்காது. சகித்துக் கொள்வதும், பொறுத்துப் போவதும், சக்தியிருந்து மன்னிப்பதும், இன்னல்களை இன்முகத்தோடு ஏற்றுக் கொள்வதும் நபிகளாருக்கு இறைவன் வழங்கிய இயற்கைப் பண்புகளாகும். அவர்கள் வீரமும் ஈர நெஞ்சமும் கொண்டவர்கள். போர்க் களத்தில் மலை குலைந்தாலும், நிலைகுலையாதவர்களாக இருந்தார்கள்.

தடுமாற்றம் இல்லாமல், புறமுதுகு காட்டாமல் எதிரிகளை எதிர்த்து நின்றார்கள். திரை மறைவில் உள்ள கன்னிப் பெண்களை விட அதிக நாணம் உள்ளவர்களாக நபிகளார் இருந்தார்கள். எவரது முகத்தையும் அவர்கள் ஆழமாக உற்று நோக்கியதில்லை. பார்வையைக் கீழ் நோக்கி வைத்திருப்பார்கள். வெட்கத்தினாலும் உயர் பண்பின் காரணத்தாலும் யாரையும் வெறுப்பூட்டும்படி பேச மாட்டார்கள். ஒருவரைப் பற்றி விரும்பாத செய்தி கிடைத்தால், ‘அவர் ஏன் இவ்வாறு செய்கிறார்?’ என்று கேட்பார்கள். அவரது பெயரை குறிப்பிட்டு சங்கடப்படுத்த மாட்டார்கள். உயர் பதவியில் இருப்போர் தனது குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர்களுக்கும் சலுகைகள் வழங்குவது என்பது காலங்காலமாக இருந்து வரும் நடைமுறையாகும். உயர் பதவியில் இருந்தாலும் பொது நிதியில் இருந்து ஒரு பேரீச் சம்பழத்தைக் கூட எடுக்கக் கூடாது என்ற கொள்கையில் நபிகளார் உறுதியாக இருந்தார்கள்.

ஏழை, பணக்காரன், உயர்ந்த ஜாதி, தாழ்த்தப்பட்ட ஜாதி, முஸ்லிம், முஸ்லிம் அல்லாதோர் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் சமநீதி வழங்கினார்கள். மொத்தத்தில் நபிகள் நாயகம், நற்குணத்தின் தாயகமாகவே திகழ்ந்தார்கள்.

“அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது” (அல் குர்ஆன் 33:21) என்பது இறைவாக்கு.

குடும்பத் தலைவராக, போதகராக, போர்ப்படைத் தளபதியாக, அப்பழுக்கற்ற ஆட்சியாளராக, இறைவனின் இறுதித் தூதராக விளங்கிய நபிகளார், வாழ்வின் எல்லாத் துறைகளிலும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள். ‘குர்ஆன் கூறும் அனைத்துப் போதனைகளுக்கும் அவர்களது வாழ்க்கையே ஒரு சான்றாக இருந்தது’ என்ற ஆயிஷா (ரலி) அவர்களின் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை ஆகும்.

அப்துல் ரஹ்மான்...

## அநுராதபுரம் மாவட்டத்தில்

# வன விலங்குகளால் ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கல்

அநுராதபுரம் தினகரன் நிருபர்



அநுராதபுரம் மாவட்டத்தில் காட்டுயானை உள்ளிட்ட பாதுகாக்கப்படும் வன விலங்குகளால் ஏற்பட்ட சேதங்களுக்கு அரசாங்கத்தினால் ஒருகோடியே 11 இலட்சத்திற்கும் அதிகமான நிதியினை நஷ்டஈடாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட நஷ்டஈட்டுக் குழுவின் தலைவியும் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபருமான (காணி) சந்யா என்.ஜீ. அபேசேகர தெரிவித்தார்.

மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நஷ்டஈட்டு குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். குழுவிற்கு கிடைக்கப்பெற்ற ஏழு உயிர்ச்சேதம் மற்றும் உடல் ரீதியான சேதம், ஐந்து உடைமைகள் சேதம் உட்பட 83 க்கு இதன்போது நஷ்டஈட்டுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. உடைமைகள் சேதத்திற்கு தற்சமயம் வழங்கப்படும் இரண்டு இலட்சம் ரூவாவினை பொருட்களின் அதிக விலையுடன் ஒப்பிடும் போது அத்தொகை போதுமானதாக இல்லாத காரணத்தினால் அத்தொகையினை அதிகரிப்பது குறித்து குழு விசேட கவனம் செலுத்தியுள்ளது. இதன்போது குழுவின் செயலாளரான வனஜீவராசிகள் திணைக்கள அநுராதபுரம் அலுவலக பிரதி ஆணையாளர் டப்ளியு.எம். கே.எஸ்.சந்ரத்ன, அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஆர்.எம்.ஏ.சீ. ரத்னாயக்க, இடர் முகாமைத்துவ அநுராதபுரம் அலுவலக பிரதிப்பணிப்பாளர் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# மன்/எருக்கலம்பிட்டி மாணவிகள் தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு

யாழ்/இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற மாகாண மட்ட தமிழ் மொழித்தின போட்டியில், மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மாணவிகள் தங்கப் பதக்கம் வென்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கு பயிற்சியளித்து வெற்றிக்கு வழிப்படுத்திய திருமதி. றிஸானா றஹ்மான் ஆசிரியை உள்ளிட்ட ஏனைய ஆசிரியர்கள் மற்றும் அதிபருக்கு கல்விச்சமூகம் வாழ்த்து தெரிவித்துள்ளது.தேசிய மட்டத்திலும் இவர்கள் சாதனை படைக்க பலரும் வாழ்த்துகின்றனர்.

# கொழும்பு உம்மு ஸாவியாவில் இன்று ஷமாஇலுல் முஹம்மதியா தமாம்



ருஸைக் பாரூக், பேருவளை விசேட நிருபர்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தினமான ரபியுனில் அவ்வல் மாதத்தை சிறப்பிக்கும் வகையில் ஷாதுலிய்யா தரீக்காவின் தலைமையகமான கொழும்பு– 12, எம். ஜே.எம் லாபிர் மாவத்தையில் உள்ள உம்மு ஸாவியாவில் வருடாந்தம் நடைபெறும் ஷமாஇலுல் முஹம்மதிய்யா மஜ்லிஸின் தமாம் வைபவம் இன்று 28 ஆம் திகதி காலை 8 மணிக்கு நடைபெறும்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் மூலம் இங்கு இடம்பெறும் தமாம் நிகழ்ச்சிகள் நேரடியாக அஞ்சல் செய்யப்படும்.

மேற்படி மஜ்லிஸ் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம் அஹ்மத் ஸூபி (மஹ்லரி) தலைமையில் இம்மஜ்லிஸ் ஆரம்பமாகி உம்மு ஸாவியா நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து எம்.மக்கி ஹாஷிமின் வழிகாட்டலின் கீழ் ஷமாஇலுல் முஹம்மதிய்யா பாராயாண மஜ்லிஸ் இடம் பெற்று வந்ததோடு அதன் விளக்கவுரையும் நடாத்தப்பட்டதாக பலஸ்தீன முன்னாள் இலங்கை தூதுவரும் உம்மு ஸாவியா நிர்வாக சபை சமய விவகார குழுத் தலைவருமான பவ்ஸான் அன்வர் தெரிவித்தார்.

தமாம் மஜ்லிஸில் கலீபாக்கள், உலமாக்கள், உம்மு ஸாவியா நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், அஜ்வாத் அல்பாஸி அரபுக் கல்லூரி மாணவர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் இஹ்வான்கள் பங்கு பற்றுவர்.

# பொரளை அஹதியாவில் மீலாதுன் நபி போட்டிகள்

புத்தளம் தினகரன் நிருபர்)

கொழும்பு, பொரளை அஹதியா இஸ்லாமிய கல்வி நிலையத்தின் வருடாந்த மீலாதுன் நபி இஸ்லாமிய போட்டி நிகழ்ச்சிகள் சிறுவர் தினமான எதிர்வரும் 01 ஆம் திகதி காலை 09 மணி முதல் அஹதியா கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அஹதியா இஸ்லாமிய கல்வி நிலையத்தின் ஸ்தாபக அதிபர் சிப்லி ஹாஷிம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வினை அஹதிய்யா பழைய மாணவர் குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

மாணவர்களின் போட்டி நிகழ்ச்சிகளோடு ஹதீஸ் மஜ்லிஸ், பயான் மஜ்லிஸ் என்பனவும் இடம்பெறவுள்ளன. மாணவர்களுக்கு பரிசுப் பொதிகளோடு இனிப்புகளும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

# நோயினால் காட்டு யானை உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் சாலியபுர சியம்பலாவ கிராமத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த காட்டு யானையொன்று உயிரிழந்துள்ளது. கடந்த (24) கிராமத்திற்குள் சென்ற காட்டு யானை நோய்வாய்ப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பிரதேசவாசிகள் அநுராதபுரம் வனஜீவராசிகள் அதிகாரிகளுக்கு அறிவித்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற உத்தியோகத்தர்கள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவித்தனர். கால்வாய்க்குள் வீழ்ந்திருந்த காட்டு யானை சுமார் 6 மணித்தியாலங்களின் பின்னர் மீட்கப்பட்ட போதிலும் சிறிது நேரத்தின் பின்னர் அது உயிரிழந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.


**அறிவித்தல்**

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, தோப்பூர் கிராம உத்தியோகத்தர் பிரிவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சர்தார் ஹாஜா - சபீனா ஆகிய நான் எனது பெயரை சர்தார் ஹாஜா சமீறா என பெயர் மாற்றிக் கொண்டேன். இனிமேல் சகல தஸ்தாவேஜுகளிலும் ஆவணங்களிலும் இப்பெயரையே குறிப்பிடுவேன் என்பதை ஸ்ரீ லங்கா குடியரசுக்கும், பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**சர்தார் ஹாஜா - சமீறா**



**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை (SLSEA)**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கையில் நிலைபெறுதகு சக்தி அபிவிருத்தி செயற்பாட்டை காட்சிப்படுத்தும் வீடியோ ஆவணப்படமொன்றை தயாரித்தல்

## (Production of video documentary to showcase the sustainable Energy development process in Sri Lanka)

**Procurement Number: SEA/PD/ONP/33-2023**

1. இலங்கையில் நிலைபெறுதகு சக்தி அபிவிருத்தி செயற்பாட்டை காட்சிப்படுத்தும் வீடியோ ஆவணப்படமொன்றின் தயாரிப்பிற்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரலின் கீழ் பொருத்தமான கம்பனிகளிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர் **www.energy.gov.lk** என்ற SLSEA இன் இணையதளத்தை பார்வையிட்டு விலைமனு ஆவணத்தை பரீட்சிக்கலாம்/பதிவிறக்கம் செய்யலாம். விலைமனுக்களை சமர்ப்பிக்க விரும்பும் தரப்பினர் ரொரிங்டன் சதுக்க இலங்கை வங்கி கிளையின் (453) 0074944408 என்ற SLSEA இன் பொது கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத 1000 இ.ரூபாவை செலுத்துதல் வேண்டும்.
3. மேலே கூறப்பட்டுள்ள பணக்கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பணக்கொடுப்பன பற்றுச்சீட்டின் பிரதியற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியானது **procurement.slsea@gmail.com** and **slseafinance@gmail.com** ஆகிய மின்னஞ்சல்களுக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனு ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 2023 ஒக்ரோபர் 5 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. 2023 ஒக்ரோபர் 18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'Production of video documentary to showcase the sustainable energy development process in Sri Lanka – SEA/D/ONP/33-2023' என குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இல.: 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, 72 ஆம் இலக்கத்திலுள்ள SLSEA இன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடும் நேரத்தின் பின்னர் விரைவாகவே திறக்கப்படும். 2024 சனவரி 25 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் 2 ஆம் உபவாசகத்தில் குறிப்பிட்டுள்ள SLSEA இன் பொது வங்கி கணக்கிற்கு ரொக்கப் பணத்தில் 20,000 இ.ரூபாவை விலைமனுப்பிணையாக அல்லது விலைமனு ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு வங்கி உத்தரவாதமொன்றாக அனைத்து விலைமனுக்களுடனும் இணைக்கப்படல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 0112575030 நீடிப்பு 226/278 ஆகிய தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,**
**இல.: 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி : 94(0) 112575030.**
**தொலைநகல் : 94(0)-112575089**
**மின்னஞ்சல் : procurement.slsea@gmail.com.**
**இணையம் : www.energy.gov.lk**
**2023 செப்டம்பர் 27 ஆம் திகதியன்று.**



## கொபெய்கனே பிரதேச சபை

## 2024ஆம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல்

**2024ஆம் ஆண்டிற்காக கீழ்க்காணும் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்வதற்காக 2023.09.28 முதல் 2023.11.17 பி.ப 3.00 வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்கப்படும்..**

**வழங்கல் மற்றும் சேவை தேவைப்பாடுகளுக்காக பதிவு செய்யும் போது கீழ்க்காணுமாறு ஒவ்வொரு பிரிவிற்கும் பதிவு செய்யும் கட்டணங்கள் அறவிடப்படல் விண்ணப்பதாரிகளுக்கு ஒரு பிரிவிற்கு அல்லது பல பிரிவுகளுக்கு விண்ணப்பங்களை வேறுவேறாக பதிவுக் கட்டணத்துடன் சமர்ப்பிக்க முடிவதுடன், கீழ்க்காணும் மாதிரிப் பத்திரத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.**

**A. வழங்கல்கள் பதிவுக்கட்டணம் (ரூ.1500.00)**

I. காகிதாதிகள்.
II. அலுவலக உபகரணங்கள்
III. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், டயர் டியூப் மற்றும் பற்றி.
IV. நிர்மாண வேலைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள்.
V. மின் விளக்கு உபகரணங்கள்.
VI. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள்/ முன்பள்ளி விளையாட்டு உபகரணங்கள்/ சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள்.
VII. சுத்திகரிப்பு விடயங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள்.
VIII. பாடசாலை உபகரணம், பரிசுப் பொருட்கள், விருது மற்றும் நினைவுப் படிகம்.
IX. சீருடை, திறைச்சீலை, கொடி மற்றும் நாய்களுக்கான கழுத்துப் பட்டி.
X. உபசரணை விடயங்களுக்கு தேவையான உணவு வகைகள்.
XI. எரிபொருள், உராய்வுநீக்கி எண்ணெய் மற்றும் எல்.பீ. கேஸ்.
XII. டிரக்டர் டெயிலர், நீர் பவுசர் மற்றும் குப்பை வண்டி.
XIII. மலர்ச்செடி, பழச்செடி வழங்கல்.

**B. சேவைகள் பதிக்கட்டணம் (ரூ.1500.00)**

I. வாகன பழுதுபார்த்தல் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல். (மின் பழுதுபார்த்தல் உற்பட)
II. வாகன சேர்விஸ் செய்தல் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.
III. வாகன குஷன் செய்தல், கார்ப்பட் செய்தல், கென்வஸ் கவர் வழங்குதல்
IV. வாகன வீல் எலைன்மன்ட் பரிசீலனை, வீல் பெலன்ஸ் மற்றும் டயர் மாற்றுதல்.
V. வாகன டிங்கரிங் மற்றும் தீந்தை பூசுதல்.
VI. வாகன வளிச்சீராக்கல் பழுதுபார்த்தல்
VII. வாகன மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்.
VIII. அச்சு விடயங்கள் மற்றும் புத்தகம் கட்டுதல்
IX. பதாகை, பெயர் பலகை மற்றும் நினைவுப் படிகம் தயாரித்தல்.
X. வளிச்சீராக்கி பொருத்துதல் மற்றும் பழுதுபார்த்தல் (கட்டிடம்)
XI. அலுவலக உபகரணம் பழுதுபார்த்தல். (கதிரை, மேசை, கெபினட்)
XII. ஒலிபெருக்கி மற்றும் மின் ஒளி சேவைகள்
XIII. மேடை, தகட்டு கொட்டில், கதிரை மற்றும் வேறு உற்சவ பொருட்கள் வழங்குதல்.
XIV. உற்சவத்திற்கான அலங்காரம் செய்தல்.
XV. சபையின் வேலைத் தலங்களுக்கு பாதுகாப்பு சேவைகளை பெற்றுக்கொள்ளல்.
XVI. கணனி துணைப்பாகங்களை பழுதுபார்த்தல் மற்றும் கணனி மென்பொருட்களை தயாரித்துக் கொள்ளல்.
XVII. மின் உபகரணங்கள் மற்றும் நீர் மோட்டார் பழுதுபார்த்தல்.
XVIII. குழாய்க்கிணறு நிர்மாணித்தல், குழாய்க்கிணறு சுத்திகரித்தல், பொதுக்கிணறு சுத்திகரித்தல்.
XVIV. மரம் வெட்டுதல் மற்றும் மரம் இழுத்தல்.
XVV. நீர் மோட்டர் பழுதுபார்த்தல்.

C. **ஒப்பந்தக்காரர்கள் - (வீதி நிர்மாணம் மற்றும் கட்டிட நிர்மானம்) வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் புகைப்பட பிரிதியை சமர்ப்பித்தல் வேண்டும்.**

| விலைமனு எல்லைகள். | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 01. ரூ.05 இலட்சத்திற்கு குறைந்த கைத்தொழில் ICTAD பதிவு தேவையற்றது. | ரூ. 2000.00 |
| 02. ரூ.05 - 10 இலட்சத்திற்கு கிடைக்கபட்ட வேலைகள் குறித்த ICTAD பதிவு இருத்தல் வேண்டும். | ரூ. 2500.00 |
| 03. ரூ.10 - 20 இலட்சத்திற்கு இடைப்பட்ட வேலைகள். குறித்த ICTAD பதிவு இருத்தல் வேண்டும். | ரூ. 3000.00 |
| 04. ரூ.20 - 50 இலட்சத்திற்கு இடைப்பட்ட வேலைகள். குறித்த ICTAD பதிவு இருத்தல் வேண்டும். | ரூ. 3500.00 |
| 05. ரூ.50 - 100 இலட்சத்திற்கு இடைப்பட்ட வேலைகள். குறித்த ICTAD பதிவு இருத்தல் வேண்டும். | ரூ. 4000.00 |

**நிபந்தனைகள்**

01. பதிவு செய்த வழங்குநர்களுக்கு மேலதிகமாக வேறு இடங்களில் இருந்தும் விலை மனுக்களை கோரி கொள்வனவு செய்யும் உரிமை சபைக்குறியதாகும்.
02. குறித்த வேளையில் விலைமனுக்களை சமர்ப்பிக்காத அல்லது குறித்த நேரத்திற்கு பொருட்களை வழங்காத அல்லது விலை மனுக்களை சமர்ப்பிக்கும் போது நிபந்தனைகளை பின்பற்றாத அல்லது வழங்குநர்களின் பதிவை முன் அறிவித்தல் இன்றி இரத்துச் செய்யப்படும்.
03. வெட் வரி பதிவு செய்த விண்ணப்பதாரிகள் வெட் வரி பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை மற்றும் 2022ம் ஆண்டில் வரி செலுத்துவதாக உள்ளூர் வருமான ஆணையாளரிடம் பெற்றுக்கொண்ட சான்றிதழின் பிரதியொன்றை இணைத்து அனுப்புவதுடன், வெட் வரி பதிவு இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
04. பதிவு செய்வதற்காக ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகள் சார்பாக வேறுவேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வழங்கல் அல்லது சேவைகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக முற்பணத்தொகை செலுத்தப்படமாட்டாது.
06. கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியதன் பின்னரும் பொருட்கள் மற்றும் சேவை வழங்கியதன் பின்னர் 30 நாள் கால எல்லையை கொடுப்பனவு விடயங்களுக்கு வழங்குதல் வேண்டும்.

பதிவு செய்தல் 2023.11.17ம் திகதியுடன் முடிவடையும்.

மேலதிக விபரங்களை 037-2293076 / 037-2293474

தொ.பே இலக்கத்தின் மூலம் விசாரித்தறியலாம்.

2023 செப்டெம்பர் 28ம் திகதி

ஏ.எஸ்.எம். பெர்ணாண்டோ
செயாலாளர்
பிரதேச சபை
கொபெய்கனே பிரதேச சபை அலுவலகத்தில்.

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)

### மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு (மேல் மாகாணம்)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கட்டிட நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் இத்தால் கோருகிறார்.
2. ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு சித்திகரமான ஒப்பந்தக்காரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்காதவர்களாகவும் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் எதிரில் தரப்பட்டுள்ள CIDA (ICTAD) பதிவுடன் மேல் மாகாண நிர்வாக எல்லைக்குள் கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
3. 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-12, இல. 59, செபஸ்தியன் மேடு, 2ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), பெறுகை அதிகாரியிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொ.பே. 011-5107010) என்பதுடன், மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் 2023 ஒக்டோபர் 02ஆம் திகதி முதல் வேலை நாட்களின் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 ஒக்டோபர் 02ஆம் திகதி முதல் 2023 ஒக்டோபர் 16ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணத்தையும் மற்றும் எழுத்துமூல விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), 2ஆம் மாடி, பெறுகை அதிகாரியிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திட்டப் பெயரை''க் குறிப்பிட்டு தலைவர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12 என முகவரியிட்டு கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) பெறுகை அதிகாரிக்கு 2023 ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. சுய விருப்பத்தின் பேரில் வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவுறுத்தப்பட்டுள்ள நேரத்திற்கு பின் உடனடியாகத் திறக்கப்படும்.
8. சகல விலைமனுக்களுடனும் 2024 பெப்ரவரி 12ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணை முறியானது விலைமனு ஆவணத்தின் நிலையான படிவத்தில் உள்ளவாறு வங்கி உத்தரவாதம்/ காப்புறுதி பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
9. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது எக்காரணம் கொண்டும் எந்நேரத்திலும் வருடாந்த செயற்பாடுகளை மேற்கொள்ளாத மற்றும் பொருத்தமான எண்ணிக்கையாகக் கருதப்படும் எந்தவொரு எண்ணிக்கைக்கும் ஒப்பந்தக்காரர்களின் பட்டியலை கட்டுப்படுத்தும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**

**விலைகூறல் அட்டவணை 2023**

| தொ. இல | நிதி வளம் | நிறைவேற்றுப் பொறியியலர் பிரிவு | கேள்வி இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | செயற்றிட்டத்தின் விபரம் | கேள்வியிடக் கூடிய தொகை வெட் இன்றி (மில்லியன்) | ஆகக் குறைந்த ICTAD தரம் (கட்டிடங்கள்) | செயற் றிட்டக் காலம் (மாதங்கள்) | கேள்விக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) வெட் 15% மற்றும் 2.5% SSCL வரியுடன் (ரூபா) | பிணை முறியின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரொக்கப் பணம் | வங்கி உத்தரவாதம் அல்லது காப்புறுதிப் பிணை |
| 1 | RRP | அகலவத்த (வலல் லாவிட்ட) | PE/2023/ GA/29 | திக்ஹேனவத்த தூவ வீதி | வீதியின் மேற்பரப்பிற்கு கொங்கிறீட் இடுதல் | 6.69 | C-06, C-07 அல்லது C-08 | 01 | 3,536.25 | 50,200.00 | 100,400.00 |

## பிழைதிருத்தம்

சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய தைத்தொழில் அமைச்சு சப்ரகமுவ மாகாண சபை.

**பெறுகை அழைப்பு**

மேற்படி தலைப்பில் கடந்த 2023.09.22ம் திகதி தினகரன் நாளிதழ் 14ம் பக்கத்தில் பிரசுரமான விண்ணப்பத்தில் 3ம் பந்தியுடன் கீழ்க்காணும் விடயத்தையும் சேர்த்து வாசித்தல் வேண்டும்.

குறித்த சகல நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் கேள்வி பத்திரத்துடன் வழங்கப்படும்.

சகல கேள்விதாரர்களும் கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2023.10.13 பி.ப 2.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தபாலில் ஏற்படும் தாமதங்கள் பற்றி பொறுப்புக்கூறப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்களை திறத்தல் 2023.10.13 பி.ப 2.15 இற்கு இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அனுமதிபெற்ற ஒருவருக்கு சமுகமளிக்கலாம்.

குறித்த தினம் அரச விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்படின் அடுத்த அலுவலக தினம் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் தினமாகக் கொள்ளப்படும்.

**எஸ்.ஆர்.விஜேதுங்க**
**தலைவர்**
**பெறுகைக் குழு**
**சமூக நலன்புரி , நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி**
**கிராமிய கைத்தொழில் அமைச்சு**
**சப்ரகமுவ மாகாண சபை, நவநகரம், இரத்தினபுரி**
**தொ.பே : 045-2222145, 045-2228137**

it's what you want
www.adz.lk

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# விலை மனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவணவிலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **பொருட்கள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/092 குழாய்-புவி கல்வனேற்றப்பட்ட இரும்பு 1500X50mm-750 | 25-10-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 2,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/109 PVC மானி உள்ளடக்கி 1 நிலைமை–10,000 | 25-10-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 8,000.00 | NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/117 வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் - III (விநியோக கட்டுமானபிரிவு)–திருகோணமலை (இரண்டு வருடகாலம்) | 11-10-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM [E]/QPPC/23/121 வாடகைக்கு கார் மின் பொறியியலாளர் (விநியோகபராமரிப்புபிரிவு) திருகோணமலை | 11-10-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM [E]/QPPC/23/122 வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (மகாஓயா மின் பாவனையாளர் சேவைநிலையம்)-அம்பாறை (இரண்டு வருட காலம்) | 11-10-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேசபிரதமமின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM [E]/QPPC/23/123 வாடகைக்குவான் மின் அத்தியட்சகர் (வர்த்தகம்) - அம்பாறை (இரண்டு வருட காலம்) | 11-10-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவுசெய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை. பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

Daily News Classifieds, the Housewives' companion

# வடக்கின் உதயம்

## மன்னாரில் பலத்த காயங்களுடன் ஒருவர் மீட்பு

மன்னார் குறூப் நிருபர்

மன்னார், உயிலங்குளம் நெடுங்கண்டல் பிரதான வீதியில் பலத்த காயங்களுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (26) இரவு மீட்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நபர், அடம்பன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்த வைத்தியசாலையிலிருந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அடம்பன் தாமரைக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் விபத்துக்கு உள்ளானாரா? அல்லது தாக்குதல் சம்பவமா? எனும் கோணங்களில் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## முள்ளிவாய்க்கால் அகழ்வுப்பணி நேற்றையதினத்துடன் நிறைவு

ஓமந்தை விசேட நிருபர்



முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் தங்கம் மற்றும் ஆயுதங்களை தேடி மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப்பணி நேற்று புதன்கிழமையுடன் (27) நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

முள்ளிவாய்க்கால் மேற்கு பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் காலத்தில் தங்கம், ஆயுதம் உள்ளிட்டவை புதைக்கப்பட்டதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கடந்த 25ஆம் திகதியிலிருந்து அப்பிரதேசத்தில் 3 நாட்களாக அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

முதலாம் நாள் அகழ்வுப்பணியின் போது ஒலிநாடாவும் தகரத்துண்டுகளும் மீட்கப்பட்டன. இருப்பினும், ஆயுதமோ, தங்கமோ எதுவும் மீட்கப்படவில்லை. இந்நிலையில், மூன்றாவது நாளாக நேற்றையதினம் அகழ்வுப்பணி மேற்கொள்ளப்பட்ட நிலையில் எதுவும் மீட்கப்படாமையால் அகழ்வுப்பணியை நிறைவுக்கு கொண்டுவர முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் உத்தரவிட்டதை தொடர்ந்து அகழ்வுப்பணி நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், தடயவியல் பொலிஸார், இராணுவத்தினர், கிராம அலுவலர் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் அகழ்வுப்பணி மேற்கொள்ளப்பட்டது.

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்று

நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்



துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை (28) காலை 8. 45 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும்.

வசந்த மண்டப பூஜைகளைத் தொடர்ந்து வல்லிபுரப் பெருமான் தேரில் ஆரோகணித்து வலம் வருவார்.

இதன் பின்னர், நாளை வெள்ளிக்கிழமை (29) பிற்பகல் 3.00 மணிக்கு சமுத்திர தீர்த்தமும் மறுநாள் சனிக்கிழமை (30) கேணி தீர்த்தமும் நடைபெறுமென, ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## நல்லூரில் திருப்பணியாற்றிய தொண்டர்கள் கௌரவிப்பு



சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ்ப்பாணம், நல்லூர்க் கந்தசுவாமி ஆலய திருவிழாவில் திருப்பணியாற்றிய இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையைச் சேர்ந்த தொண்டர்களை கௌரவிக்கும் நிகழ்வு நல்லூர் சிவகுரு ஆதீன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வானது சிவகுரு ஆதீன முதல்வரும் இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமய தொண்டர் சபையின் ஆலோகருமான வேலன் சுவாமிகளுடைய அருளாசிகளுடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அழகாபுரியில் ஒருவரை கத்தியால் குத்தியவருக்கு கடூழிய சிறைத்தண்டனை

### கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பு

பரந்தன்குறூப் நிருபர்

கிளிநொச்சி, இராமநாதபுரம் அழகாபுரி பிரதேசத்தில் ஒருவரை கத்தியால் குத்தி கடுங்காயம் ஏற்படுத்திய குற்றவாளிக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 24 மாதகால கடூழிய சிறைத்தண்டனை விதித்து கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அத்துடன், 10,000 ரூபா அபராதம் செலுத்துமாறும் இதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் குற்றவாளி 12 மாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடுமெனவும், நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட நபருக்கு 2 இலட்சம் ரூபா நட்டஈடு செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அழகாபுரியில் கடந்த 2013ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் திகதி ஒருவரை கத்தியால் குத்தி கடுங்காயம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பாக சட்ட மாஅதிபர் திணைக்களத்தால் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில், கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ.சகாப்தீன் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

## சுன்னாகத்தில் 13 பவுண் தங்க நகைகள் திருட்டு

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள வீடொன்றில் 13 பவுண் தங்க நகைகளையும் ஒருதொகை வெளிநாட்டுப் பணத்தையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (26) திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

மேற்படி வீட்டு உரிமையாளர், பாடசாலையிலிருந்து தனது பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வர சென்ற போதே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளதென, பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் எவரும் இல்லாத வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் இந்த திருட்டை புரிந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

## APIIT Lanka நிறுவனத்தின் Extravaganza 2023 விளையாட்டுப் போட்டிகள்

APIIT Lanka நிறுவனத்தின் மாணவ செயற்பாட்டு கழகத்தினால் 9ஆவது முறையாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக் கழகங்களுக்கிடையிலான Extravaganza 2023 மாபெரும் விளையாடடு நிகழ்ச்சிகள் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) லெவெண்டர் அரங்கில் நடைபெற்றன.

Extravaganza 2023 மாபெரும் விளையாட்டு நிகழ்ச்சிகளின் குறிக்கோளாக அமைவது இன்றைய போட்டி மிக்க விளையாட்டு உலகில் மெய்வல்லுனர் விளையாடடுத் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல், விளையாட்டு திறமைகளை வளர்த்தல், மாணவர்கள் மத்தியில் ஒற்றுமையையும் நல்லுறவையும் பலப்படுத்துதல் ஆகியனவாகும். இலங்கை முழுவதிலும் இருக்கின்ற பல்கலைக் கழகங்களில் இருந்து இந்த விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றும் மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்ற விளையாட்டு திறமைகளை வெளிக்கொணர்தல் முக்கிய இடத்தை பெற இருக்கின்றது. நாடெங்கிலும் உள்ள 50 இற்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களில் இருந்து மிகவும் திறமை மிக்க விளையாட்டு வீர, வீராங்கனைகள் பங்கெடுப்பதோடு இது வரையில் எந்தவொரு அரங்கிலும் வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காது அவர்கள் மத்தியில் இருந்து வருகின்ற விளையாட்டு ஆற்றல்களை வெளிப்படுத்துதல், ஏனையவர்களிடம் இருந்து அவர்கள் அறிவையும் இத்துறைகளிலான ஆற்றல்களையும் கற்றுக் கொள்ளும் ஆர்வத்தை பிரபல்யப்படுத்தல் ஆகிய விடயங்களோடு மாத்திரம் நின்றுவிடாது அதற்கு அப்பாற்பட்டதாக ஒருபடி மேல் சென்று அந்நியோன்ய உறவை பலமடையச் செய்தல் போன்ற செயற்பாடுகளை அரங்கேற்றவும் இந்த விளையாட்டு நிகழ்வு பிரதானமான ஒரு மேடையாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.



இந்த Extravaganza 2023 மாபெரும் விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி முதல் அக்டோபர் மாதம் 05 ஆம் திகதி வரையான 06 வாரங்களுக்கு தொடாந்து நடைபெற இருக்கின்றது. இதில் பலவிதமான விளையாட்டுப் போட்டிகள், மாணவர்களது விளையாட்டு சாகச நிகழ்ச்சிகள் என்பன அரங்கேற்றப்பட இருக்கின்றன.

## தினகரன் Business

### பட்டப்பின் கல்வி டிப்ளோமா மற்றும் கல்வி முதுமாணி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தும் SLIIT

கல்வியின் ஊடாக வாழ்க்கையை வளப்படுத்துவது என்ற நோக்கத்தில் தரமான கற்பித்தலை நோக்கி ஆசிரியர்களை வலுப்படுத்தும் வகையில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (Postgraduate Diploma in Education) மற்றும் கல்வி முதுமாணி (Master of Education) நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதை SLIIT பெருமையுடன் அறிவிக்கின்றது.

2024 கல்வி ஆண்டிற்காக SLIIT இனால் இந்த டிப்ளோமா மற்றும் கல்வி முதுமாணி பட்டம் என்பன முன்வைக்கப்பட்டிருப்பதுடன், முதுமாணி பட்டம் ஜனவரி மாதத்திலும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெப்ரவரி மாதத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வாறு ஆரம்பிக்கப்படும் கல்வி முதுமாணி பட்டத்தின் இலங்கை தகமைகள் சட்டகத்தின் (SLQF) 9ஆம் தரநிலையுடன் உள்ள பாடத்திட்டத்தின் காலம் 12 மாதங்கள் ஆகும். இலங்கை தகமைகள் சட்டகத்தின் (SLQF) 10ஆம் தரநிலையுடன் உள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் காலம் 24 மாதங்களாகும். அதற்கான வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடத்தப்படும்.

இது இரண்டு தவணைகளைக் கொண்டிருப்பதுடன், ஒவ்வொரு தவணையும் மாணவர்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான தேர்வுகள் நடத்தப்படும்.

இதற்கமைய நிகழ்ச்சித்திட்டத்தை விருப்பமான தரநிலைக்கு அமைய 12 மாதங்கள் அல்லது 24 மாதங்களில் நிறைவு செய்ய முடியும்.

24 மாத நிழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்தி செய்த பின்னர் கலாநிதி (PhD) நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்வதற்கான வாய்ப்பைப் பெறுவதுடன் அவர்கள் இதற்காக நேரடியாகப் பதிவுசெய்யலாம்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முன்னெடுக்கப்படும்.

## காப்புறுதித் தொழில்துறை செயல்திறன் வேகத்தை மேம்படுத்தும் இலங்கை காப்புறுதிச் சங்கம்

இலங்கை காப்புறுதிச் சங்கம் (Insurance Association of Sri Lanka IASL) தனது உறுப்பு நிறுவனங்களின் உற்சாகமான பங்கேற்புடன் ஆண்டுதோறும் செப்டெம்பர் மாதத்தில் 'காப்புறுதி மாதத்தை' அனுட்டித்து வருகின்றது.

இலங்கை அரசாங்கத்தால் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் 1 ஆம் திகதி தேசிய காப்புறுதி தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. செப்டெம்பர் 1 ஆம் திகதி முதல் இந்த வருடத்தின் காப்புறுதி மாதம் ஆரம்பமாகும் நிலையில், தொற்றுநோய் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது முன்னர் ஒரு போதும் முகங்கொடுத்திராத வகையில் எழுந்த நெருக்கடிகளின் போது, காப்புறுதி மூலமான பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், IASL ஆனது, 'விழிப்புடன் இருந்து பாதுகாக்கப்படுவோம்' (Staying aware is staying protected) என்ற கருப்பொருளுடன் ஊக்குவிப்புப் பிரசாரமொன்றை முன்னெடுக்கின்றது.

இன்றைய நுகர்வோர் தேவைகளைப் பொறுத்தவரையில், சுகாதாரம், கல்வி மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் அவர்களின் முன்னுரிமைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன.

அதிகரித்து வரும் பணவீக்கம், வரிகள் மற்றும் மருத்துவச் செலவுகள் ஆகியவற்றின் பின்னணியில், வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய காப்புறுதித் தொழில்துறை தயாராக உள்ளது. விரைவான வேகத்தில் டிஜிட்டல் மாற்றத்தை உள்வாங்கிக்கொண்ட முதன்முதல் தொழில்துறைகளில் காப்புறுதித் துறையும் ஒன்று என்று சொல்வது மிகவும் பொருத்தமானது.

வாடிக்கையாளர் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக தொழில்துறையானது காப்புறுதித் திட்டங்கள் தொடர்பான புத்தாக்கங்களில் தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றது.

## இரண்டாவது ஆண்டாகவும் முன்னெடுக்கப்படும் யூனியன் அஷ்யூரன்ஸின் BLOG IT 2.0

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாகவும் BLOG IT 2.0 என்பதை முன்னெடுப்பதாக மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. செப்டெம்பர் மாதம் அனுஷ்டிக்கப்படும் காப்புறுதி விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆர்வமுள்ள எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் கதை ஆசிரியர்களை இந்த திட்டத்தில் பங்கேற்று "ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம்" எனும் தலைப்பில் தமது கட்டுரைகள், சிறுகதைகள் அல்லது கவிதைகளை தமக்கு பிடித்த மொழியில் சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளது. 2023 ஒக்டோபர் 13ஆம் திகதிக்கு முன்னதாக https://unionassurance.com/blogit/ta/ எனும் இணையப் பக்கத்தினூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

பங்குபற்றுநர்களின் ஆக்கத்திறன் மற்றும் உள்ளார்ந்த திறன்களை கௌரவிக்கும் வகையில், ரூ. 180,000 வரை கவர்ச்சிகரமான பரிசுகளை வழங்க யூனியன் அஷ்யூரன்ஸ் முன்வந்துள்ளது. மேலும், வெற்றியாளர்களின் ஆக்கங்கள் யூனியன் அஷ்யூரன்ஸ் இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன், நிறுவனத்தின் சமூக ஊடக நாளிகைகளினூடாக பிரசாரப்படுத்தப்படும்.

ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம் என்பது தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளின் ஒரு நீடிக்கப்பட்ட அங்கமாக BLOG IT 2.0 அமைந்துள்ளது. ஆயுள் காப்புறுதியின் உண்மையான முக்கியத்துவத்தை தனிநபர்களுக்கு உணரச் செய்து, அவர்களின் ஒட்டுமொத்த நிதிசார் நலனை மேம்படுத்துவதற்கு நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

## ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

# இலங்கையின் கொல்ப், ஈ ஸ்போர்ட்ஸ் வீரர்கள் இன்று களமிறங்குகின்றனர்

சீனாவிலிருந்து நிரோஷான் பிரியங்கர


சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வரும் 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை வீர, வீராங்கனைகள் பலரும் நேற்றைய (27) தினத்திலும் போட்டிகளில் பங்கேற்றபோதும் பதக்கத்தை நோக்கி முன்னேறும் அளவுக்கு அவர்கள் தமது திறமையை வெளிப்படுத்தத் தவறியுள்ளனர்.

இதில் ஆர்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் பங்கேற்ற நதில நெத்விரு தனது தனிப்பட்ட சிறந்த திறமையை வெளிப்படுத்தி இருந்தார். ஒட்டுமொத்த போட்டியிலும் அவர் 71.065 புள்ளிகளைப் பெற்றிருந்தார். எவ்வாறாயினும் போட்டியில் பங்கேற்ற 18 வீரர்களில் அவர் 17 ஆவது இடத்தையே பெற்றார்.

பெண்களுக்கான 100 மீற்றர் பக்ஸ்ட்ரோக் நீச்சல் போட்டியில் ஆரம்ப சுற்று போட்டியில் பங்கேற்ற கங்கா செனவிரத்ன 1:07.21 நிமிடங்களில் போட்டியை நிறைவு செய்து 6 ஆவது இடத்தையே பெற்றார். இந்தப் போட்டியில் தனது சிறந்த காலத்தை பெற தவறிய அவர் 27 வீராங்கனைகளில் 20 ஆவது இடத்தையே பெற்றார்.

செஸ் போட்டியில் நேற்று 8 ஆவது சுற்று போட்டியில் பங்கேற்ற சுசல் தெவ்ஜான் பிலிப்பைன்ஸ் வீரரிடம் தோல்வியை சந்தித்தார். தொடர்ந்து 9ஆவது சுற்றில் கிரிகிஸ்தான் வீரருடன் போட்டியிட்ட அவர் அந்தப் போட்டியில் வெற்றியை பதிவு செய்தார்.

பொக்சின் போட்டியின் 51 எடைப் பிரிவில் 32 வீரர்கள் பிரிவில் பங்கேற்ற ருக்மால் பிரசன்ன, பங்களாதேஷின் ஹொஸைன் சலீமிடம் 2–3 என தோல்வியை சந்தித்தார். இந்தப் போட்டியில் கடைசி இரண்டு சுற்றுகளிலும் வெற்றிபெற ருக்மாலினால் முடிந்தபோதும் முதல் 3 சுற்றுகளிலும் வெற்றிபெற்ற பங்களாதேஷ் வீரர் வெற்றியை உறுதி செய்தார்.



இதன் 63 கிலோகிராம் எடைப் பிரிவில் நிராஜ் விஜேவர்தன இன்று (28) போட்டியிடவுள்ளார்.



இது தவிர நீச்சல் வீரர் மத்தியு அபேசிங் மற்றும் அகலங்க பீரிஸ் 50 மீற்றர் பட்டர்பிளை ஆரம்பச் சுற்று போட்டிகளில் பங்கேற்கவிருப்பதோடு, கொல்ப் மற்றும் ஈ ஸ்போர்ட்ஸ் போட்டிகளிலும் இலங்கை வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

ஈ ஸ்போர்ட்ஸ் அணிக்கு சமுதித தர்மசிறி, மொஹமட் ரிஸ்வி, ரமேஷ் பெர்னாண்டோ மற்றும் மொஹமட் ரியாம் ஆகியோர் இடம்பெற்றிருப்பதோடு, டீ. தரங்கராஜா, மிதுன் பெரேரா, அநுர ரோஹன மற்றும் கே. பிரபாகர் இலங்கை கொல்ப் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் போட்டியை நடத்தும் சீனா 72 தங்கப் பதக்கங்களுடன் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துவதோடு தென் கொரியா 16 தங்கப் பதக்கங்களுடன் இரண்டாம் இடத்திலும் ஜப்பான் 13 தங்கப் பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. கிரிக்கெட்டில் மாத்திரம் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றிருக்கும் இலங்கை 24 ஆவது இடத்தில் உள்ளது.

# பதக்கங்களை கைப்பற்றிய மாணவர்களுக்குப் பாராட்டு

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்ற ஒலுவில் அல்–ஹம்றா மகா வித்தியால மாணவர்களை பாராட்டும் நிகழ்வு பாடசாலையில் கடந்த திங்களன்று இடம்பெற்றது.

அதிபர் அஷ்ஷேய்க் யு.கே. அப்துர் ரஹீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கந்தளாயில் நடைபெற்று முடிந்த பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற எம்.ஏ.ஆர். ஹாபீஸ் ரய்ஹான் மற்றும் ஹிதாயத்துல்லாஹ் லுபினா ஆகியோர் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நெஸ்டமோல்ட் சைக்கிளோட்ட போட்டி: சமுதுனி முதலாமிடம்




நெஸ்டமோல்ட் சைக்கிளின் சலெஞ்ச் சைக்கிள் பந்தயத்தின் பாடசாலை பெண்களுக்கான பிரிவில் ஜனுஜா சமுதுனி வெற்றியீட்டினார்.

கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் இருந்து கடந்த ஞாயிறன்று (24) நடைபெற்ற இந்தப் போட்டியில் 19 கிலோமீற்றர்கள் தூரம் கொண்ட பாடசாலை பெண்களுக்கான பிரிவு போட்டியில் சமுதுனி 41.38 நிமிடங்களில் போட்டித் தூரத்தை முடித்து வெற்றியீட்டினார்.




இதில் எச். எஸ். செவ்வந்தி இரண்டாம் இடத்தையும் மெதனிக்கா ராஜபக்ஷ மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இந்தப் போட்டிகளுக்கு நெஸ்லே நெஸ்டமோல்ட் பூரண அனுசரணை வழங்கியது.

# வனிந்து இன்றி இந்தியாவை அடைந்தது இலங்கை அணி



உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை அணி நேற்று (27) காலை குவாஹாத்தி நகரை சென்றடைந்தது. பதினைந்து பேர் கொண்ட இலங்கை குழாத்துடன் மேலதிக வீரராக சாமிக்க கருணாரத்னவும் இலங்கை அணியுடன் சென்றுள்ளார்.

எனினும் முன்னணி சுழற்பந்து சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க உபாதையில் இருந்து குணமடையாத நிலையில் கடைசி நேரத்தில் அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டு மற்றொரு சுழற்பந்து சகலதுறை வீரரான துஷான் ஹேமந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் காயத்தில் இருந்து மீண்டு வரும் ஹசரங்க தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருவதாகவும், அவர் உடல் தகுதி பெறும் பட்சத்தில் குழாத்தில் காயங்களுக்காக மாற்று வீரராக உடன் சேர்க்கப்படுவார் என்றும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

குவாஹாத்தியின் லோகொப்ரியா கோபினாத் போர்தோலோய் சர்வதேச விமானநிலையத்தை அடைந்த இலங்கை அணிக்கு அங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கிருந்து அணியினர் விவென்தா ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இலங்கை அணியினர் பயிற்சிப் போட்டிகளுக்காக அங்கு தங்கவுள்ளனர். இலங்கை அணி நாளை (29) குவாஹாத்தியில் முதல் பயிற்சிப் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இதற்காக பங்களாதேஷ் அணி நேற்று மாலை குவாஹாத்தியை அடைந்தது.

இலங்கை அணி தொடர்ந்து ஒக்டோபர் 3 ஆம் திகதி இதே குவாஹாத்தி பர்சபரா அரங்கில் இரண்டாவது பயிற்சிப் போட்டியில் ஆப்கானிஸ்தானை எதிர்கொள்ளவுள்ளது.

ஒக்டோபர் 5 ஆம் திகதி ஆரம்பமாகும் உலகக் கிண்ணத்தில் இலங்கை தனது முதல் போட்டியில் ஒக்டோபர் 7 ஆம் திகதி தென்னாபிரிக்காவை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி டெல்லி, அருன் ஜெயிட்லி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# டி20இல் 300 ஓட்டங்கள் பெற்ற முதல் அணியானது நேபாளம்




டி20 சர்வதேச கிரிக்கெட்டில் 300 ஓட்டங்களை பெற்ற முதல் அணி என நேபாளம் உலக சாதனை படைத்துள்ளது. ஆசிய விளையாட்டுப் போட்டியில் மொங்கோலியாவுக்கு எதிராக சீனாவின் ஹாங்சோ நகரில் நேற்று (27) நடைபெற்ற ஆட்டத்திலேயே நேபாளம் டி20 சர்வதேச கிரிக்கெட்டில் பல சாதனைகளையும் படைத்தது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நேபாள அணி 20 ஓவர்களுக்கும் 3 விக்கெட்டுகளை இழந்து 314 ஓட்டங்களை பெற்று டி20 போட்டியில் அதிகூடிய ஓட்டங்களை பெற்ற ஆப்கானிஸ்தானின் சாதனையை முறியடித்தது.

ஆப்கான் அணி 2019 இல் அயர்லாந்துக்கு எதிராக 3 விக்கெட்டுகளை இழந்து பெற்ற 278 ஓட்டங்களே முன்னர் சாதனையாக இருந்தது.

இதன்போது மூன்றாவது வரிசையில் வந்த குஷால் மல்லா 34 பந்துகளில் சதம்பெற்று டி20இல் அதிவேக சதத்தை பதிவு செய்தார். அவர் 50 பந்துகளில் 12 சிக்ஸர்கள் மற்றும் 8 பௌண்டரிகளுடன் ஆட்டமிழக்காது 137 ஓட்டங்களை பெற்றார்.

அதேபோன்று டிபென்த்ரா சிங் பத்து பந்துகளில் 8 சிக்ஸர்களை விளாசி 52 ஓட்டங்களை பெற்று டி20இல் அதிவேக அரைச்சதம் பெற்றவராக சாதனை புரிந்தார். இதன்போது அவர் ஒன்பது பந்துகளிலேயே அரைச்சதம் பெற்றார்.

நேபாள அணி மொத்தமாக பெற்ற 26 சிக்ஸர்களும் டி20 இன்னிங்ஸ் ஒன்றில் அதிகூடிய சிக்ஸர்களாக சாதனை படைத்தது.

பதிலெடுத்தாடிய மொங்கோலிய அணி 41 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன்மூலம் 273 ஓட்டங்களால் வெற்றியீட்டிய நேபாளம் டி20 சர்வதேச கிரிக்கெட்டில் மிகப் பெரிய வெற்றியையும் பதிவு செய்தது.

முன்னதாக 2019 ஆம் ஆண்டு துருக்கிக்கு எதிராக செக் குடியரசு 257 ஓட்டங்களால் வென்றதே சாதனையாக இருந்தது.

## சர்வதேச செய்திகள்

# ஈராக்கில் திருமண வைபவத்தில் தீ: புதுமண தம்பதியுடன் 114 பேர் பலி

வடக்கு ஈராக்கில் திருமண வைபவம் ஒன்றில் ஏற்பட்ட தீயில் மணமகள் மற்றும் மணமகன் உட்பட 100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 150 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

வடக்கு நின்வே மாகாணத்தில் உள்ள குரகோஷ் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை (26) இரவு இடம்பெற்ற இந்தத் திருமண வைபவத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்த நிலையிலேயே இந்த தீ ஏற்பட்டுள்ளது.

தீ ஏற்படுவதற்கான காரணம் உறுதி செய்யப்படாதபோதும் பட்டாசு கொளுத்தப்பட்ட நிலையிலேயே தீ பரவி இருப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. திருமண மண்டபத்தில் இருந்த எரியக்கூடிய பனல்கள் தீ தீவிரமாக பரவக் காரணமாகி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதனால் மண்டபத்தின் உட்கூரைகள் தீப்பிடித்து உள்ளே இருந்தவர்கள் மீது விழுந்துள்ளன.

தீ மூண்ட ஒருசில நிமிடங்களிலேயே கட்டடத்தின் சில பகுதிகள் இடிந்து விழுந்ததாக ஈராக்கின் சிவில் பாதுகாப்புத் துறை குறிப்பிட்டது. இதனால் பலரும் மண்டபத்திற்குள்ளேயே சிக்கியுள்ளனர்.







“அதிகம் தீப்பிடிக்கக் கூடிய மலிவான கட்டட பொருட்கள் பயன்படுத்தப்பட்டதால் மண்டபத்தின் ஒரு பகுதி தீப்பிடித்த சில நிமிடங்களிலேயே தீயில் கருகி விழுந்துள்ளன” என்று ஈராக்கின் சிவில் பாதுகாப்பு பணியகம், அரச செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளது. இந்த தீக்கு பின்னர் அந்தத் திருமண மண்டபத்தில் இரும்புக் கதிரைகள் உட்பட அனைத்து பொருட்களும் கருகிய நிலையில் இருக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

திருமண ஜோடிகள் நடனமாட ஆரம்பித்த நேரத்தில் தீ பரவ ஆரம்பித்ததாக காயங்களுடன் உயிர் தப்பிய ஒருவர் உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

“அவர்கள் பட்டாசு கொளுத்தினார்கள். அதனை அடுத்து உட்கூரை பகுதியில் தீப்பற்றியது. வினாடிகளிலேயே ஒட்டுமொத்த மண்டபத்திற்கும் தீ பரவியது” என்றார்.

இந்தத் தீயில் 114 பேர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டபோதும் அந்த எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இந்தத் தீயில் 450க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தும் காயமடைந்தும் இருப்பதாக ஈராக் செம்பிறை சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மூச்சுத்திணறல் மற்றும் பலமான தீக்காயங்கள் காரணமாகவே உயிரிழப்புகள் இடம்பெற்றிருப்பதாக ஈராக் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மோசமாக தீக் காயங்களுக்கு உட்பட்டிருப்பதாக மாகாண சுகாதார அதிகாரியான அஹமது துபர் தானி தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கும் ஈராக் பிரதமர் ஷியா அல் சுதானி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும்படி உள்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டுள்ளார்.

இந்த திருமண மண்டபத்தின் உரிமையாளர் தலைமறைவாகி இருக்கும் நிலையில் அவரை கைது செய்ய பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல தசாப்தங்கள் போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஈராக்கில் நிர்மாண துறையின் பாதுகாப்பு தரங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இவ்வாறான விபத்துகள் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன.

2021 ஜுலையில் தெற்கு ஈராக்கில் உள்ள மருத்துவமனை ஒன்றில் கொவிட் பிரிவில் ஏற்பட்ட தீயில் 60க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். அதே ஆண்டு ஒக்டோபரில் பக்தாத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் ஒட்சிசன் தொட்டி வெடித்ததில் ஏற்பட்ட தீயில் 80க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 28ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.